முரசொலி

வார இதழ் — ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | 3-2-56 | வெள்ளி | ஒலி 44

போர்! போர்!

"கோழைகள் விலகட்டும்; வீரர்கள் பின் தொடரட்டும்" என முரசு கொட்டி-கண்ணில் கனலெடுத்து மண் மீட்கக் கிளம்பிவிட்டது மறவர் பட்டாளம்!

யாரென்று நினைத்து விட்டீர் எம்மை? சாரற்ற கனியா? கூர் அற்ற வேலா? உயிரற்ற சவமா?

இல்லை;இல்லை; கரத்திலே வாள் பெற்று, நெஞ்சிலே உரம்பெற்று நாம் குடிக்கின்ற கஞ்சியிலே விஷத்தைக் கலந்துவிட்ட கொடியவர்களைக் கூறுபோடும் கூற்றம் யாம் — எனக் குரல் கொடுத்து விட்டனர் குன்றனைய திடம் பெற்ற சர்வகட்சிப் பிரதிநிதிகள்!

போரென்றால் புலியாகி, வேரொன்று, நுனியொன்றாய் நச்சு மரங்களைத் துண்டுபோடும் தி. மு. கழகம் அந்த முன்னணியில் அங்கம் வகிக்கிறது!

பி. டி. ராசனை தலைவராக ஏற்று தமிழரசுக் கழகத்தின் சார்பாக ம.பொ.சி., கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஜீவானந்தம் சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாக அந்தோணிப் பிள்ளை, பிரஜா கட்சி சார்பாக சுப்ரமணியம்;

—இத்தனை பேரும் கன்னித் தமிழ் நாட்டின் கண்போன்றபகுதிகளைப் பெறுவதற்குக் கச்சை கட்டிக் கிளம்பி விட்டனர்!

பிப்ரவரி 20-ந் தேதியன்று பிடரி சிலிர்க்கவிட்டு சினம் கொண்டு அலையும் சிங்கமென மாறப் போகிறது தமிழகம்!

நாடு எரிமலை நிலையில் இருக்கும் இந்த நேரத்திலே தான் அமைச்சர் சுப்ரமணியனார் ஏளனக் கணைகளை நம்மீது தொடுக்கும் துணிவு பெற்றிருக்கிறார்!

'எங்களுக்கில்லாத அக்கரை இவர்களுக்கென்ன வந்தது? உண்மையில் பார்க்கப் போனால், யாராவது செத்துவிட்டால் அவர்களது நெருங்கிய உறவினர்கள் யாரும் அழமாட்டார்கள். துக்கம் விசாரிக்க வந்தவர்கள்தான் ஒப்பாரி வைப்பார்கள்!'

—இப்படிப் பேசுகிறார், சுப்ரமணியம்!

நெருங்கியவர்கள் செத்தால் அழுகை வராதாம்!—செப்புகிறார் அமைச்சர்!

நெருங்கியவர் செத்தால் மட்டுமா அழுகை வராது? நெருங்கியவரைச் சாகடித்தாலும் அழுகை வராதே? காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சே கண்ணீர் சிந்தவில்லையே!

—அதே சூழ்நிலைதான் இங்கும் உருவாகியிருக்கிறது!

பீர்மேடு — தேவிகுளம் --செங்கோட்டையின் பகுதி பறிபோனது குறித்து ஒப்புக்காகவேனும் ஒரு துளிக் கண்ணீராவது சிந்தவில்லை சுப்ரமணியமும், அவரது அமைச்சரவையைச் சேர்ந்தோரும்!

ஆமாம்;அன்று கோட்சேயும் அழவில்லை; இன்று தமிழர் சுயமரியாதையின் கழுத்தைப்பிடித்து நெறித்துப் போட்ட இந்த இழி தகைப் பண்பினரும் சிரித்தபடிதான் இருக்கின்றனர்! சிரிக்கட்டும்! செந்தமிழ் நாட்டுச் சிற்றூர்களை அடுத்த வீட்டுக்காரனிடம் அடகு வைத்துவிட்டு அவமானத்தை உடமையாக்கிக் கொண்டோர் சிரித்துக் கொண்டேயிருக்கட்டும்!

பிப்ரவரி-20-ந் தேதியன்று தமிழகம் தணல்போலக் காட்சியளிக்கும்; ரயில் ஓடாது; பஸ் நின்றுவிடும்; நாடக சினிமாசாலைகளில் நாற்காலிகள்தான் கிடக்கும்! கடைவீதிகள் காலியாக இருக்கும்! காரியாலயங்கள் அடைபட்டுவிடும்! மந்திரிமார்கள் பவனிவரும் கார்களின் டிரைவர்கள்கூட அன்று ஹர்த்தால் செய்யலாம்.

சிரித்து, சிரித்து, சித்தம் பேதலித்து நிற்கும் அமைச்சர் திலகங்கள் இதற்குப் பிறகும் சிரித்துக் கொண்டேதான் இருக்கப் போகிறார்களா?

—பிப்ரவரி 20-ம்நாள் புறப்படப் போகும் புயல் இதற்குத் தகுந்த விடையளிக்கட்டும்!

★

★ 'பூசுர ஜோதியின்' புதிய ஞானம் ★

அன்புள்ள குமார்,

குதிரைப்பந்தய சூதாட்டமும், 'கோமகன்' பிரகாசாவும் வாழ்கின்ற கிண்டியை தேடிப்பிடித்து விடுதலை விளக்கை கையிலே ஏந்தி, வீரத்தை நெஞ்சிலேசுமந்து சுதந்திரப் பாதை நோக்கி சுடர் முகம் திருப்பி வாழ்ந்து-அழிக்கப் பட்ட, அண்ணல் காந்தியாருக்கு நினைவு மண்டபம் ஒன்று சுமார் நான்கு லட்ச ரூபாய் செலவில் எழுப்பி யிருக்கிறார்கள்!

நான்கு லட்ச ரூபாய் செலவில் நினைவு மண்டபம் என்றவுடன் 'பொருளாதாரக் கண்ணோட்டத்தில்' 'ஏன்?', என்ற வினாவை எழுப்பி விடுவேன் என்று கருதுவாய்! பிரச்சனை அதுவல்ல!

அடிமைத்தளை ஒடித்து விடுதலை வாங்கித் தந்த சுதந்திரப் பறவைகள், கேடு களைந்து நாடு மீட்டிடும் நல்லவர்கள், விடுதலை உணர்ச்சி மங்கிக் கிடந்த சமுதாயத்தில் உரிமை எண்ணத்திற்கு வித்திட்டு, எழுச்சியைத் தூண்டி விட்ட உத்தமர்கள் ஆகியோருக்கு நினைவு மண்டபங்களும், புகழ்ச் சின்னங்களும் ஏற்படுத்தி, மாநிலத்தோர் தங்கள் இதயம் கொழித்திடும் வாழ்த்துக்களையும், மரியாதைகளையும், தெரிவித்துக் கொள்வதும், வீர வணக்கம் செலுத்துவதும், புதிதல்ல!

வெறும் புகழ்ச் சின்னங்களை மட்டும் எழுப்பிவிட்டு, அந்த உத்தமர்கள் போதித்த கருத்துக்களை ஆழக்குழி வெட்டி, அதிலே புதைத்து விட்டு, கல்லறை நோக்கி கண்ணீர் வடிப்பதும், காதளவு வாயைக் கிழித்துக் கொண்டு பேசுவதும், அந்த கர்மவீரர்களுக்குக் காட்டப்படும் மரியாதையாகாது என்பது மட்டுமல்ல! அந்தப் புகழேந்திகளின் கீர்த்திக்கு அச்செயல் களங்கம் கற்பிப்பதாகும்!

மத வெறியும், மனித சமுதாயத்தில் மலையத்தனை வேறுபாடுகளும் கூடாது என்றும், அன்பு, அறம், அகிம்சை, ஆகிய தத்துவங்களை போதித்து வந்த காந்தியடிகளை மதத்தின் பெயரால் கொன்று போட்டு 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற வார்த்தைகளை கசிந்து கண்ணீர் மல்க, பாடி விடுவதால் மட்டும், அந்த உத்தமருக்கு மரியாதை செலுத்தியவர்களாகிவிட முடியுமா?

அவர் சொல்லிச் சென்ற கருத்துக்களில் சிலவற்றையாவது பின்பற்றி—அவர் விட்டுச் சென்ற பணிகளில் இரண்டொன்றையாவது செய்து முடித்து விட்டு, கல்லறைக்கு முன்னால் நின்று கண்ணீர் வடிப்பதிலும், கவலைப் படுவதிலும் பொருள் இருப்பதாகக் கொள்ள முடியும்!

நாடெங்கும் அதிருப்தியும், ஆட்சியாளர்கள் மீது அருவருப்பும் நிலவிக் கொண்டிருக்கும் வேளையில்-ஆளவந்தாரின் போக்கைக்குறித்து கண்டனக் குரல் எழுப்புவோரின் இதய வெப்பம் நீராவியென வான மண்டலத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில்—

தோட்டாக்களின் முழக்கமும் துப்பாக்கிகள் கக்கிடும் புகையும் நாட்டை சூழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில்—

காந்தியாருக்கென ஒரு நினைவு மண்டபம் எழுப்பி அங்கே ரத்தக் கண்ணீர் வடிப்பதால் யாருக்கு என்ன பயன்? ஊர் மெச்சுதலுக்கும் உண்மைக்கு திரையிடுவதற்கும் தானே அந்த செயல் பயன் படமுடியும்?

கிண்டியிலே காந்தியாரின் நினைவிற்கென ஒரு மண்டபம் எழுப்பி விட்டு' 'சம்பளம்' என்ற பெயரால் 'பண ஓடையை' தன் பங்களாவை நோக்கி திருப்பிக் கொண்டிருக்கும் 'கவர்னர் பிரான்' தலைமையில் ஆண்டு அலுத்தவர்' கண்ணீர் வடித்திருக்கிறார்,

குமார்! "ஏகாதிபத்யத்தைவிரட்டத்தானே காங்கிரஸ் ஸ்தாபனம்-அதுதான் மூட்டை முடிச்சுகளுடன் கப்பல் ஏறிவிட்டதே இன்னும் காங்கிரசிற்கு வேலை என்ன? அந்த அமைப்பையே கலைத்து விடுங்கள் என்று ஆயிரம் முறை சொன்னேனே? யார் கேட்டார்கள் என் பேச்சை! இனத் திமிரும் பணத் திமிரும்—அதிகார வேட்டையும்—ஆணவப் போக்கும்—சதிராடும் வெறிக் காடாக்கி விட்டீர்களே காங்கிரஸ் கட்சியை!

எப்படியெல்லாம் அரும்பாடு பட்டு வளர்க்கப்பட்ட அமைப்பு அது, பாவிகளே! அந்த அமைப்பைதான் இன்று பதவிச் சண்டைக்குப் போராடும்-பாம்புகள் உலவும்-பாழ் நிலமாக்கி விட்டீர்களே! போய் விடுங்கள் இங்கிருந்து! என் இதயத்தில் எரிதணலை வாரிக் கொட்டாதீர்கள்" என்று தானே கல்லறைக்குள் இருந்தபடியே கண்ணீர் வடித்திருப்பார் அந்த கர்மவீரர்!

நான்கு லட்சம் ரூபாய்களை செலவழித்து எழுப்பப்பட்ட அந்த மண்டபத்தில்-காந்தியாரின் சிலை கிடையாதாம் 'சிலை வணக்கம்' கூடாது என்பதல்லவாம் காரணம் அதற்கு — அப்படியொரு 'புதுமை'யை செய்திருக்கிறார்களாம்!

அதோடு மட்டுமல்ல—அந்த மண்டபத்தை திறந்து வைத்து உறையாற்றிய 'பூசுரஜோதி' சிலை ஏன் வைக்கப்படவில்லை என்பதற்கு ஒரு விளக்கமும் தந்திருக்கிறார்;

'இங்கே காந்தியடிகளின் சிலை இல்லையே என்று பலருக்குக் குறை; நான் பல இடங்களில் காந்தியடிகளின் சிலையைப் பார்த்திருக்கிறேன்: அதை நினைத்தால் கண்ணீர் வருகிறது; காந்தியார் இறந்துவிட்டாரே என்பதற்காக அல்ல—அச்சிலைகளில் ஒன்றாவது காந்தியடிகளைப் போல இல்லை! அண்ணலின் முகத்தைப் போல, களிமண், இரும்பு, தங்கம் வெள்ளி எதனாலும் செய்வது கஷ்டம்; ஆத்மாவின் ஒளியை சிலைகளில் பார்க்க முடியாது. அம்மாதிரி முகபிம்பத்தை ஆண்டவனால்தான் செய்ய முடியும். விநாயகர்—நடராசரை, சிலையாக செய்துவிடலாம். அவர்கள் கோபிக்க மாட்டார்கள், நாமும் அவர்களைப் பார்த்ததில்லை"



"காந்தியடிகளுக்கு கோயில் கட்டி அவர் உபதேசங்களை மறந்துவிடுவார்கள் என்ற ஆட்சேபனைக்கு இடமின்றி அவர் சொன்ன லட்சியங்களை நினைவுறுத்த ஆடுமாடு முதலிய சின்னங்களை மண்டபத்தில் பொருத்தி இருக்கிறோம்,"

ஆச்சாரியார் சிந்தியுள்ள இந்த வாசகங்களில் சில, உண்மையாகவும், சில வேடிக்கை நிறைந்ததாகவும், இன்னும் சில சித்தப்பிரமையால் பேசப்பட்டன போலவும், நம் சிரிப்புக்கு வித்திடுகின்றன.

கல்லிலும், செம்பிலும் காந்தியடிகளின் சிலை செய்து வைப்பதால் அந்த சிலைகளில் 'ஆத்ம ஒளி'யைக் காணமுடியாதாம்!

கடவுளுக்கு வேண்டுமானால் சிலை செய்து விடலாம், அவர்கள் கோபிக்க மாட்டார்கள், நாமும் அவர்களைப் பார்த்ததில்லை; என்று ஒரு விளக்கமும் தந்துள்ளார்,

சிலை எப்படி இருந்தாலும் கடவுள் கோபிக்க மாட்டாராம்!

'சாணி உருண்டை'யைக் கூட கடவுளாக்கி வைப்பதும் இந்த கருத்தின் அடிப்படையில்தான் போலும்!

'கடவுளை நாம் பார்த்ததில்லை' அவர் கருத்துஇது! நாமும் இதைத் தான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறோம்!

ஆனால் நமக்கோ, 'நிரீஸ்வர வாதிகள்' என்ற 'நமதேயத்தை' சூட்டி விடுகிறார்கள்;

ஆனால் ஆச்சாரியார்—அவர் ஓர் ஆஸ்திகப் பழம்!

குமார், காந்தியார் ஒரு இலட்சியவாதி; கோடிக் கணக்கானவர்கள் அவர் அன்பு தவழ் சொல் கேட்டு, அருளொழுகும் முகம் பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர்.

ஆயிரக் கணக்கான சிற்பிகளும்-சித்திரக்காரர்களும், அவர் உருவைச் சித்தரித்தும், ஓவியமாக்கியும் இருக்கிறார்கள்; அவர்களுள் நேரில் பார்த்தோர் பலப்பலர்!

என்றாலும், அண்ணலின், 'ஆத்ம ஒளியை' சிற்பங்களிலும், சித்திரங்களிலும் தீட்டிக்காட்ட முடியவில்லை, இது ஆச்சாரியாரின் கருத்து!

ஆண்டவனையே பார்க்காதவர்கள்; சிலைகளையும், சிற்பங்களையும் தீட்டி, 'இதுதான் ஆண்டவன்' என்று குறிப்பிடுகிறார்களே; அவைகளிலே மட்டும், ஆண்டவனின் 'ஆத்ம ஒளி' எப்படி நிலை பெற்றுவிடுகிறதோ நமக்குத் தெரியவில்லை!

ஏதோ சிலவற்றில் 'ஆத்ம ஒளி' இல்லாத காரணத்தால், காந்தியடிகளின் சிலையே வேண்டாம் என்று கூறும் இவர்;

'ஆத்ம ஒளி' இல்லாதது மட்டுமல்ல; காட்டுப் பூச்சிகளைப்போல கோர சொரூபங்களாக கல்லிலும் செம்பிலும், சிலை செய்து விட்டு 'கடவுள்' என்று கூறுகிறார்களே, அவைகளும் வேண்டாம், அவைகளில் கடவுள் பண்பு காணப்படவில்லை! என்று கூறும் நம்மைப் பார்த்து, கனைப்பதும், கண்டனம் எழுப்புவதும், எந்த நியாயத்தை அடிப்படையெனக் கொண்டதோ நம்மால் அறிய முடியவில்லை!

'ஆத்ம ஒளி' இல்லாத காரணத்தால் காந்தியடிகளின் சிலைகளே வேண்டாம், என்கிறார் ஆச்சாரியார்!

'அறிவொளி' வீசாத காரணத்தால், நாடெங்கும் காணப்படும் 'கடவுளர்' சிலைகளும் வேண்டாம்! என்கிறோம் நாம்!

'அவர் போதித்த கருத்துக்களை மட்டும், மறந்து விடாமல் இருக்க, கற்களில் அவர் போதனைகளை செதுக்கி வைத்துக்கொள்வோம்' என்கிறார் ஆச்சாரியார்!

'ஆண்டவன் 'தன்மை'கள் என்று கூறப்படும், 'அன்பு, அறம் அறிவு, இந்த அரிய வார்த்தைகளை இதயத்திலே கல்வெட்டாக்கி வைத்துக் கொண்டு அதன் வழி நடப்போம்' என்பதுதான் நம் அறிவுப்படையின் வாதம்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 3-2-'56 வெள்ளி

திரும்பிப் பாரும்!

குடியாத்தம் சேர்தலிலே ஜனநாயக வீணையின் தந்திகளை மீட்டிவிட்டு—நாட்டை வேட்டைக் காடாக்கி விளையாடிய ஆச்சாரியாருக்கு வழியனுப்பு நடத்தியவர் இன்று ஜார்ஜ் கோட்டைக்குள்ளே தர்பார் நடத்தி வருகிறார்.

அவர்தான் செஞ்சி தாலுகா இரண்டாவது அரசியல் மாநாட்டிலே பேசினாராம்—ஜனநாயகத்தில் எதிர்க் கட்சியாரின் கடமை பற்றி!

கருஞ் சட்டைக்காரர்களின் கட்டை விரலை வாங்கிவிடுவேனென்று கசாப்புக்காரர் பாஷையிலே கர்ஜனை புரிந்தவர்தான் எதிர் கட்சிகள் நடந்துகொள்ளும் விதம் பற்றி நெஞ்சு இனிக்கும் உபதேச மொழிகளை உதிர்த்திருக்கிறார்!

எதிர்க் கட்சிகள் இருப்பதையே ஒழிவெனக் கருதி, கழுகுக் கோலம் பூண்டிருக்கும் காங்கிரசின் அதிபர் இன்று தூயோன் வேடம் பூண்டு 'பகவத்கீதை' படிக்கிறார்!

வேடிக்கை! வேடிக்கை!! மாடுகளை அனுப்பி, மாற்றான் வீட்டு வேலியைத் தாண்டி மேயவிடும் முதலமைச்சர் கட்சிகளின் பண்பாட்டை விமர்சிக்கிறார்!

"கடமை, பொறுப்பு, கட்டுப்பாடு இவைகளுடன் கூடியதாக இருப்பதே ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பொறுப்பு. ஆனால் அக்கட்சியினர் ரயிலை நிறுத்துவதும், கருப்புக்கொடி காட்டுவது போன்ற வேலை முதலியவைகளில் ஈடுபடுவோர்களேயானால் மக்களே அவர்களை வெறுப்பார்கள்!"

—இதுவும் காமராசர் வாசகம்தான். சம்பிரதாயத்துக்கு விரோதமாக தலைமையுரையை திறப்புரைக்கு முன்னே ஆற்றி புரட்சி செய்திருக்கும் விருதுநகரார் வார்த்தைகள்தான்!

எதிர்ப்பு காட்ட கருப்புக் கொடி காட்டுவதும், பொதுமக்களின் கோதிப்பைக் காட்ட போராட்ட நேரங்களில் ரயிலை அமைதியாக நிறுத்துவதும் 'மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கும்' செயல்களாம்!

சைமன் கமிஷனுக்கு கருங்கொடி எதிர்ப்பு காட்டினார்கள்!

ஆகஸ்ட் கலவரத்தின்போது ரயில் பெட்டிகளுக்கு நெருப்பு வைத்தார்கள்!

தண்டவாளங்களுக்கு அடியிலே சுதந்திரம் கிடைக்கிறதா என்று தேடிப் பார்த்தார்கள்!

ஏன்? மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கா? காங்கிரஸ் கட்சிக்குக் கல்லறை தேடுவதற்கா?—இல்லையே!

சுதந்தரப் பாதையைச் செப்பனிடப் போகிறோம்—என்றல்லவா செப்பினார்கள்!

—அத்தகைய இயக்கத்துக்குத் தலைமை வகிப்பவர்தான் இன்று 'அரிஸ்டாடிலா'கி ஜனநாயகத்தின் பண்புகளைப் புரியவைக்கிறார்!

உதாரணம் தேவை யென்றால் பம்பாயைப் பாரீர்; அங்கு நடக்கும் நாச வேலைகளைக் காணீர்—என்று வாய்ப்பறை அடிக்கிறார்.

பம்பாயில் நடந்ததென்ன? பைத்தியம் பிடித்தவர்களா அங்கு வெறிச்செயல்கள் புரிந்தார்கள்? இல்லையே; மோதிலால் மைந்தரல்லவா அங்கு குற்றவாளிக் கூண்டிலே நிற்கவேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது!

வானொலியில் பேசும்போது ஆசியஜோதி குறிப்பிட்டார்; பம்பாயை மகாராஷ்டிரத்தின் ஒருபகுதி என்று கருதி விடலாம். ஆனால் தேசிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் அந்த நகரை மத்ய சர்க்காரின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருவதே நல்லது.

இப்படிப் பேசியவர், ராஜிநாமாவை கையில் வைத்துக் கொண்டு அலையும் சிந்தாமணி தேஷ்முக் அல்ல; பார்மோசா சீனாவின் பகுதி என்று வெளிநாட்டார் உடமை பற்றிப் பேசும் ஜவகர்லால் நேருதான்!

"பம்பாய் உங்கள் நகரம்; ஆனால் நாங்கள் அதை எடுத்துக் கொள்ளுகிறோம்"-நாடாள்பவரே இப்படித் தீர்ப்புச் சொல்லி விட்டால் எப்படிச் சகிப்பார்கள் உடமைக்கு உரியவர்கள்? தோள்கள் தினவெடுக்காதா? நரம்புகள் முறுக்கேறாதா? கண்கள் கனல் சிந்தாதா?

—கொள்ளிக் கட்டையைக் கூரையின்மீது எறிந்து விட்டு தீயணைக்கும் படைக்கும் செய்தி சொல்லி அனுப்புவது போலிருக்கிறது, இந்தக் காந்தி சீடர்களது செயல்!

வடநாட்டுத் தலைமைப் பீடத்திடம், சுய உணர்வை ஒப்புவித்திருக்கும், காமராசரும் இதே தவறுகளைத்தான் புரிந்து வருகிறார்.

கருங்கொடி காட்டுவோரும், ரயிலை நிறுத்துவோரும் அவர்களாகவே பொதுமக்கள் வெறுப்புக்கு ஆளாகிறார்களாம்!

அப்படியானால் காமராசர் இத்தகைய செயல் புரிவோரை பொது மக்களே கேட்டுக் கொள்ளட்டும் என்று, அவர்கள் தீர்ப்புக்கே விட்டு விடுவாரா? அல்லது காங்கிரஸ் இயக்கத்து பழைய வரலாற்றுச் சுவடியினைத் திருப்பிப் பார்த்தாவது சித்தம் தெளிவடையத் தயாராக யிருக்கிறாரா?—இரண்டிலொன்றை அவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும்! பிப்ரவரி 20-ந் தேதிக்குள்!

அம்மாமியின் அப்பளம்!



"தென்னகம் தேய்கிறது—என்று புலம்பி அழுகிறீர்களே! இதோ பாரும்; உமக்குத் தொழில் வளம் அளிக்கத்திட்டம் தீட்டியிருக்கிறோம்" —என்று சொல்வதுபோல சென்ற கிழமை உலக வரலாற்றிலேயே இதுவரை எங்குமில்லாத புதியதொரு தொழிற்சாலை திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள்!

அப்பளம் தயாரிப்பதற்கு ஒரு திட்டமாம்!

இந்த 'ஆலை'யாவது சென்னையில் உளதே என்று திருப்தி அடையுங்கள்—என்பது போல வட நாட்டைத் தொழிலரசாய் மாற்றி வரும் 'கனம்'கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்!

அங்கே சிந்திரிகள்! இங்கே அப்பள 'ஆலை'கள்!

அங்கே நேருவின் கையில் 'ஸ்பானர்' போன்ற தொழிற் சின்னங்கள்!

இங்கே காமராசர் கையிலே அப்பளக்குழவி!

—இதுதான் ஏக இந்தியக் கூட்டுறவால் நமக்குக்கிடைக்கும் பலன்!

புது வாழ்வு...

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

கவிதைகளில் சில எனக்காகவே எழுதப்பட்டவை போன்று இருந்தன.

"மண்ணாய்ப்போக! மண்ணாய்ப்
போக!
மனம்பொருந் தாமணம்
மண்ணாய்ப் போக!
சமூகச் சட்டமே
சமூக வழக்கமே!
நீங்கள் மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப்
போக!"

என் மணமும் பொருந்தாமணம் தான். செல்வ மணியை நான் பார்த்ததேயில்லை. அவனுக்கு என்னைப் பலி கொடுத்து விட்டனர். என் வாழ்வே பாழாய் விட்டது. நான் கைம்பெண் ஆகி விட்டேன், என் உள்ளத்து உணர்ச்சிகளை யார் அறிவார்? 'கைம்மைக் கொடுமை' என்ற கவிதையின் பால் என் பார்வை சென்றது.

கூண்டிற் கிளி வளர்ப்பார்—இல்
[லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்
வேண்டியது தருவார்—அவற்றின்
விருப்பத்தை யறிந்தே
மாண்டவன் மாண்டபின்—அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையர் காண்பதில்லை-ஐயகோ
அடிமைப் பெண்கதியே!'

இவை போதாவா ஒரு இளம் விதவையின் இதயத்தைக் கிளறி விடுவதற்கு? அப்பப்பா! என் மனத்தில் எழுச்சியலைகள் குமுறிக் குமுறி எழுந்தன. வீங்கிய உள்ளம் தன்னுள் அடைந்து கிடந்த எண்ணச் சுமையைப் பெரு மூச்சாக மாற்றிச் சிறிது சிறிதாக வெளி விட்டுத் தன் கனத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பியது.

டண் டண் டண் என்று மணி அடித்து முதல் 'பீரியட்' முடிவுற்றதை அறிவித்தது. அடுத்தது கணக்கு. இனியும் இப்படியே இருந்தால் சரியல்ல. பொழுதை வீணாக்கிக் குழந்தைகளின் படிப்பைப் பாழாக்கலாமா?

நான் பேசாமல் திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்தேன். இன்று ஏன்தான் மனம் இப்படித் தவிக்கிறதோ! திரும்பவும் அதுமுரண்டு செய்ய ஆரம்பித்தது'

"அந்த அப்பியாசத்திலுள்ள கணக்குகளை வரிசையாகப் போடுங்கள் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு மீண்டும் மேசைமீதிருந்த புத்தகங்களைப் புரட்டலானேன்; மீண்டும் என் நிலையைக் காட்டும் பாடல்தான் கண்ணில் பட்டது,

'கோரிக்கை அற்றுக் கிடக்கு
தண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா—மிகக்
கொடியதென மெண்ணிடப்
பட்டதண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா!
'சீரற் றிருக்குதையோ குளிர்
தென்றல்
சிறந்திடும் பூஞ் சோலை—சீ
சீஎன் றிகழ்ந்திடப் பட்டதண்
ணே நறுஞ்
சீதளப் பூ மாலை.'

என் சொல்வேன் என் மன நிலையை! எனையும் இப்படித்தான் வெறுக்கிறார்கள், வீட்டிலும் வெளியிலும். என்றுமே நான் கோரிக்கையற்றுக் கிடக்க வேண்டியதுதானா? என் பார்வைமேலும் சென்றது!

'காதல் சுரக்கின்ற நெஞ்சத்
திலே—கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர்—ஒரு
கட்டழகன் திருத்தோளினைச்
சேர்த்திடச்
சாத்திரம் பார்க்காதீர்!'

அன்று முழுவதும் 'கட்டழகன் திருத்தோளினைச் சேர்த்திடச் சாத்திரம் பார்க்காதீர்' என்ற அடி என் காதிலே ஒலித்துக் கொண்டேயிருந்தது, ஒரு வழியாக இறுதி மணியும் அடித்துத் தொலைத்தது. சுசீலாவிடம் அந்த அறிவு நூல்களை ஒப்படைத்து விட்டு எழுந்தேன்.

மாலை வேளையில் நான் எப்போதும் கோயிலைச் சுற்றிக் கொண்டு தெரு வழியாகத்தான் செல்வேன். சுசீலாவும் என்னுடன் வருவதைப் பார்த்து, "ஏன் இப்படி வருகிறாய்? சாவடித்தெரு வழியாக அல்லவா நீ போக வேண்டும்?" என்று கேட்டேன்.

"இல்லை அக்கா என் அண்ணாவின் நண்பர் வீடு இங்கேதான் இருக்கிறது" என்றாள். எதிர் சாரியில் நான்கு வீடுகளுக்கு அப்பால் ஒரு வீட்டைக் காண்பித்து, "அதுதான்" என்றாள். நான் மேலே சென்றேன். அந்த வீட்டில் ஏதோ 'ஒளி' இருப்பதாகத் தோன்றியது 'பகுத்தறிவு வாதி இருப்பதால்தான் போலும் அங்கு ஒளி வீசுவது போலத் தெரிகிறது' என்று அசட்டுத்தனமாக எண்ணினேன், சுசீலா உள்ளே சென்றாள் நான் மேலும் நான்கடி நடப்பதற்குள் சுசீலா வெளியே வந்து விட்டாள். அவள் கையில் அதே நூல்கள் இருப்பதைக் கண்டு 'என்ன?' என்று கேட்டேன்.

"அவர் புகைவண்டி நிலையத்துக்குப் போயிருக்கிறாராம். அவர் நாளை விடிகாலை வண்டியில் ஊருக்குப் போகிறார். அதற்குள் புத்தகங்களை அவரிடம் கொடுத்து விட வேண்டுமே? நான் தனியாக இப்போது அங்கே எப்படிப் போவேன்?" என்றாள். அவள் முகத்தில் வேதனை படர்ந்தது. என் மனம் அவளுக்கு இறங்கியது 'சித்தி திட்டுவாளே, நேரம் சென்று போனால்?' என்ற எண்ணம் எழுந்தது. உடனே, 'ஆமாம்; சீக்கிரம் போனால் மட்டும் கொஞ்சவா போகிறாள்?' என்ற எண்ணமும் தோன்றவே 'வாம்மா உன்னுடன் நானும் வருகிறேன்' என்றேன்.

புகைவண்டி நிலையத்தில் பலர் உலவிக் கொண்டிருந்தனர். சுசீலாவிடம் 'எங்கே உன அண்ணாவின் நண்பர்?' என்று கேட்டேன், அவள் சிறிது நேரம் அந்த இடத்தைக் கண்களால் அலசி விட்டு, 'அதோ!' என்று கூவினாள். அவள் காட்டிய இடத்தில் கம்பி வேலியில் சாய்ந்தபடி இயற்கைக்காட்சிகளைப் பார்த்த வண்ணம் இருந்தார் ஒரு இளைஞர், எனக்கு வெட்கமாகவும் தயக்கமாகவும் இருந்தது.

"சுசீலா! அவரைக் கூப்பிட்டு இவற்றைக் கொடு" என்று இரகசியமாகக் கூறி விட்டு அவள் கையைப் பிடித்தபடி அவர் இருந்த பக்கம் சென்றேன்.

சுசீலா, 'அண்ணா!' என்றழைத்தாள்.

அவர் திடுக்கிட்டுத் திரும்பினார். முதலில் சுசீலாவையும் பிறகு என்னையும் பார்த்தார். என் மீது பட்ட பார்வை அப்படியே நிலைத்து விட்டது. என் கண்கள் தரையை நோக்கின.

சுசீலா புத்தகங்களை அவரிடம் ஒப்படைத்து விட்டு "அண்ணா! இவங்க தான் எங்க டீச்சர் "பூங்குழலி" என்றாள்.

"ஓ, அப்படியா? என் பெயர் குன்றத்தோளன். சென்னையிலே டாக்டர் தொழிலுக்குப் படிக்கிறேன்" என்று தம்மைத் தாமே அறிமுகம் செய்து கொண்டார்.

நான் தரையிலிருந்த பார்வையை எடுக்காமலே வணக்கம் தெரிவித்தேன்.

அவர், "ஏன் சுசீலா! உங்க டீச்சரின் அப்பா அம்மா யார்? எங்கே இருக்கிறார்கள்?" என வினவினார்.

"என் பெற்றோர் இப்போது இங்கே இல்லை" என்றேன்.

"ஓ! கணவருடன்...?" என்று சொல்ல வந்ததை முடிக்காமலே புன்முறுவல் பூத்தார். அதைக் கடைக்கண்ணால் கண்டு விட்ட நான் என் வேதனையை அடக்கிக் கொண்டு, "இல்லை, இல்லை, நான் கணவருடன் வாழவில்லை. நான்... நான்... விதவை என்றேன்.

"என்ன! வித..." என் கழுத்தையும் நெற்றியையும் வெறித்து நோக்கிய அவர் 'சடாரென' வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

என்ன! இவர்கூட என் எதிரில் நிற்கக் கூசுகிறாரா? பகுத்தறிவு வாதி என்று நினைத்தேனே! அவரை நான் நோக்கிய போது அவரது முழங்கை அவர் முகத்தைக் கடந்து நீண்டிருந்தது. அவர் என்ன செய்கிறார் என்று புரியவில்லை,

வெகு நேரம் நான் மனதுக்குள்ளேயே அழுது கொண்டிருந்தேன்.

வேலியில் சாய்ந்திருந்த அவர் வெகு நேரம் சென்றபின் திரும்பினார். அவர் முழங்கை நனைந்திருந்தது; கண்கள் சிவந்திருந்தன

"உங்களுக்கு எப்போது மணம் நடந்தது?" அவர் குரல் ஏன் இப்படி கம்மியிருக்கிறது?

"என்னுடைய இரண்டாவது வயதில் நடந்தது. சட்டத்திற்கு பயந்து புதுச்சேரியில் போய் நடத்தினார்களாம். என்னுடைய பத்தாவது வயதில் என் கணவர் மறைந்து விட்டார், நான் அவரைப் பார்த்ததே இல்லை" என்றேன்.

"பரிதாபமான நிகழ்ச்சி. நம் மன்பதையில் எப்போதுதான் மூடப் பழக்கங்கள் ஒழியப் போகின்றனவோ?" என்று பெருமூச்செறிந்தார்.

அவரை நிமிர்ந்து நோக்கினேன். 'கட்டழகன் திருத் தோளினைச் சேர்த்திடச் சாத்திரம்பார்க்காதீர்!' என்று இரைச்சலிட்டது என் இதயம். "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"துணைவி இறந்த பின் வேறு துணைவியைத் தேடுமோர் ஆடவன் போல், பெண்ணும் துணைவன் இறந்த பின் வேறு துணை தேடச் சொல்லிடுவோம் புவி மேல்" என்றார்,

"இது புரட்சிக் கவிஞரின் பாடல்" என்றேன்!

"இது ஏட்டில் இடம் பெறும் பொருட்டுப் பாடப்பட்டதல்ல. நடைமுறையில் பின்பற்றும் பொருட்டு இயற்றப் பட்டது"

முன் பின் பார்த்துப் பழகியவர்களல்ல ஆனால், கொள்கை என்ற பேச்சு எழுந்தவுடன் வெகு நாள் பழகியவர்கள் போலாகி விட்டோம். என்ன விந்தை!

மெல்ல இருட்டிக் கொண்டு வருவதை நோக்கிய நான், "சுசீலா போகலாமா?" என்று கேட்டபடி புறப்பட்டேன்,

"இருங்கள்! நாம் இன்னும் பிரச்சினைக்கு முடிவு காணவில்லையே?" என்றார் அவர்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று திருப்பிக் கேட்டேன்.

"புரட்சிக் கவிஞர் காட்டிய பாதையில் செல்ல நான் எப்போதும் தயார் நீங்கள்...?"

"எனக்கு... வாழ்வளிக்க... யா...ரா...வது முன் வந்தால்... நானும்...அவ்வழி....நடக்க...முன் வருவேன் என்று தயக்கத்தோடு ஒவ்வொரு சொல்லாக வெளியிட்டேன்.

"நான் முன் வந்தால்?" என்று 'சடா'ரெனக் கேட்டார். நான் திடுக்கிட்டேன். பேசத்தெரியாமல் திண்டாடினேன், என் காதுகளை நம்பலாமா என நான் ஐயமுற்ற போது அவர் தம் சொல்லை உறுதி செய்வதுபோல் திருமணத்தைப் பற்றியே பேச ஆரம்பித்து விட்டார் பதிவு மணம் செய்து கொண்டு சென்னையில் வாழ்க்கை நடத்துவது என்பதுவரை அவர் முடிவு செய்து விட்டார்.

செய்தியைக் கேள்விப் பட்டதும் வீட்டில் நடக்கும் அமர்க்களத்தை எண்ணியபோது உள்ளம் நடுங்கியது. நான் வெளியிட்டபோது அவர், "நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம் நானே செய்தியை அறிவித்து அவர்களை சமாதானப் படுத்தி விடுவேன்" என்றார், களிப்போடு வீடு திரும்பினேன்.

நான் எதிர்பார்த்தபடியே செய்தி அறிந்ததும் வீட்டில் பூகம்பம் நிகழ்ந்தது. சித்தி குலம் அழிந்ததே எனப் புலம்பினாள். சித்தப்பா மானம் போய்விட்டது என்று இரைந்தார். குன்றத்தோளன் அவர்களைச் சமாதானப் படுத்தப் பெரிதும் முயன்றார், இறுதியில் 'எப்படியாவது பாரம் இறங்கி விட்டால் நல்லது' என எண்ணிக் கொண்டிருந்த சித்தப்பா ஒருவாறு அடங்கி விட்டார்; சித்தியையும் அடக்கி விட்டார்.

பொங்கலன்று எங்கள் திருமணம் இனிது நடைபெற்றது. நான் குன்றத்தோளனின் குன்று போன்ற தோள்களைப் பற்றி, வெறிச்சென்றிருந்த என் குழலில் பூவைச்சூட்டி உண்மையாகவே என்னைப் பூங்குழலி ஆக்கி விட்டீர்கள்" என்றேன். என் கூந்தலிலிருந்த மலர் அறை முழுவதும் மணத்தைப் பரப்பியது!

சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்ட கதை

நகைக் கூட்டஞ்செய்தான் அக்கள்வன் மகன்!

— பி. சி. கணேசன், பி. எஸ்சி; பி. டி. —

"அம்மா, நீங்கள் இப்படியே படுத்திருந்தால் என்னம்மா செய்வது? மலர் அணியாமல், மை யெழுதாமல், எப்பொழுது பார்த்தாலும் கண் கலங்குவதும் பெருமூச்சு விடுவதுமாகவே இருக்கிறீர்களே... எனனிடம் கூடவா உங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டக் கூடாது?" அன்பும் பாசமும் பெருகத்-தோழி, பெருமூச்சால் காலத்தைக் கழிக்கும் தலைவியைப் பார்த்துக் கேட்டாள்.

"அதை ஏனடி கேட்கிறாய்... அன்றிலிருந்து என் மனமே என் வசம் இல்லையடி," என்று மற்றொரு பெருமூச்சைத் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி யாக்கினாள் தலைவி.

தோழி புன்முறுவலோடு தலைவியைப் பார்த்தாள். தலைவியோ நாணத்தால் தலைகவிழ்ந்தாள்.

மனநெகிழ்ச்சியைப் பிறரோடு பகிர்ந்துதானே ஆறுதல் பெறவேண்டும்? நாணத்தை மெதுவாக விலக்கி, தலைவி பேச்சைத் துவக்கினாள்.

"தோழி, நாம் சிறுமிகளாயிருந்தபொழுது மணல் வீடு கட்டி, மணலால் பிட்டு முதலிய உண்டி ஆக்கி விளையாடுவோமே, உனக்கு நினைவிருக்கிறதா?"

"அதெப்படியம்மா மறக்கும்?"

"அப்பொழுது ஒருபட்டி—துடுக்குச் சிறுவன்—வீட்டிற்கு அடங்காப் பிடாரியாய்த் திரிவானே...நாம் வைத்து விளையாடிய மணற் சிற்றிலைக் காலால் சிதைத்து, கூந்தலில் நாம் முடிந்திருக்கும் மலரினைப் பிய்த்து நாம் வைத்து விளையாடிய வரிப்பந்தினைப் பிடுங்கிக் கொண்டு ஓடி, நம் மனம் நோகும்படியான செயல்களையெல்லாம் செய்வானே...நினைவிருக்கிறதா?"

"ஆமாம், நன்றாக நினைவிருக்கிறது!"

"அவன் இப்பொழுது எப்படி இருக்கிறான் தெரியுமா? போடி, நான் சொன்னால் நீ கேலி செய்வாய்..."

"அவனை நீங்கள் இப்பொழுது எங்கேயம்மா பார்த்தீர்கள்?"

"கேளடி, அவசரப்படாமல், ஒரு நாள் நானும் என் அன்னையும் வீட்டில் இருந்தோம். அப்பொழுது யாரோ ஒருவன் வந்து, 'அம்மா, தாகமாயிருக்கிறது, தண்ணீர் கொடுங்கள்!' என்று கேட்டான். உடனே அன்னை என்னை அழைத்து, பொற்குவளையில் நீர் எடுத்துப் போய் நீர் வேண்டி வந்தவனுக்கு நீரூட்டி வரும்படி என்னை அனுப்பினாள். நான் வாயிலுக்குப் போய், அவனிடம் நீர்க்குவளையை நீட்டினேன். உடனே அவன் வளையல்களணிந்த என் முன் கையைப்பற்ற, நான் வெகுண்டு, அலமந்து, 'அம்மா, இவனுடைய செயலைப் பார்த்தாயா?' என்று கூவி அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினேன், பிள்ளைப் பருவத்தில் நமக்குப் பெருந்தொல்லைகளைக்கொடுத்த அப்பட்டிச் சிறுவன், பேரெழில் மிக்க ஆண்மகனாய் என் முன் நின்று கொண்டிருந்தான்! அதற்குள் என் கூக்குரலைக்கேட்ட அன்னை வெளியே ஓடி வந்தாள். 'என்ன நடந்தது?' என ஆவல் குறியோடு அன்னை வினவ, நான அவனைக் காட்டிக் கொடுக்க மனமில்லாமல், 'நீருண்ணும் பொழுது விக்கினான்', என்று ஒரு பொய்யைச் சொல்ல, அன்னை அதை உண்மையென நம்பி, அவன் முதுகைத்தடவிக் கொடுத்தாள். ஆனால் அந்தக் கள்வனோ, தன் ஓர விழிகளால் என்னை நோக்கிக் கொல்வான் போல் புன்முறுவல் செய்து என் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச்சென்று விட்டானடி!"

தலைவி பேசி முடித்துவிட்டாள். இனித் தோழியின்வேலை தூதுபோவது தானே? மேலே வரைந்துள்ள அற்புதமான காட்சியைக் கலித்தொகைப் பாடலொன்று சுவைபடச் சித்தரிக்கிறது.

சுடர்த்தொடீஇ கேளாய், தெரு
வில் நாமாடும்
மணல் சிற்றில் சிதையா
அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து
கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி,
மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமால்,
இல்லிரே
உண்ணு நீர் வேட்டேன் என
வந்தாற்கு, அன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச்,
சுடரிழாய்!
உண்ணு நீர் ஊட்டிவா என்றா
ளென், யானும்
தன்னையறியாது சென்றேன்;
மற்று என்னை
வளைமுன் கை பற்றி நலியத்,
தெருமந்திட்டு
அன்னாய், இவனொருவன் செய்தது
காண் என்றேனா
அன்னை அலறிப்படர்தரத் தன்னை
யான்
உண்ணு நீர் விக்கினான் என்றேனா;
அன்னையும்
தன்னைப் புறம்பழித்துநீவ மற்று
என்னைக்
கடைக் கண்ணால் கொல்வான்
போல்
நோக்கி நகைக் கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்,
—குறிஞ்சிக்கலி, பாடல் 51

ஒரு காலத்தில் நோதக்க செய்த அச்சிறுபட்டி, தன் குறும்புத்தனம் மாறாமல் நீர் வேண்டினந்து. நீருட்டியவள் வளைமுன் கரம் பற்றி, அவள் கூறிய பொய்யால் அவள் உள்ளமுணர்ந்து, கடைக் கண் வீசி, புன்னகையால் அப்பொன்னகையாளின் உள்ளத்தைக் களவாடிச் சென்ற காட்சியை சொல்லோவியமாக்கி யிருக்கும் இப்பாடல்—பயில்தொறும் இன்பம் பயக்கும் அதன் பாங்கு தமிழர் கண்ட அகவாழ்விற்கு ஒரு சிறந்த சான்று. ஆண்—பெண் உள்ள நெகழ்ச்சிகளை உள்ளத்தைத் தொட்டு இன்பமூட்டும் இலக்கியமாய்—இலக்கியத்தில் ஒரு துறையாய்க்—கண்ட தமிழரின் கலையுணர்ச்சியை என்னென்பது? படித்து, இன்புற்றுப் பாராட்டுவது தானே நாம் அவருக்குச் செய்யும் முதற் கைமாறு.

★

ஏனோ? தெரியவில்லை!

சினிமா, என்ற சொல்லைக் கேட்டவுடன் சினம் கொண்ட நாகத்தைப் போல தலை தூக்கியவர்கள், சினிமாப் படத்தின் ஓரிரு வசனங்கள் கூட எத்தகைய பிரச்சார சக்தி வாய்ந்தவை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

திரையுலகப் பிரவேசத்தால் தங்களுக்குப் 'பிடிக்காத' சிலருக்குப் புகழ் முத்துக்கள் கிடைத்து விடுகின்றனவே என்ற பொறாமைத் தீயால் கருகிக் கொண்டிருந்தவர்கள்; மோதிப்பார்த்து 'வான்கோழி'களாக்கப்பட்டவர்கள், தற்காலிகமாக தங்கள் உதட்டசைவிற்கு ஓய்வு தந்திருக்கிறார்கள்;

அறிவுக் கொத்துக்களை வெள்ளித்திரையிலே மலரச்செய்யும், அறிவுப்படையைச் சேர்ந்த நல்லவர்கள்—வாழ்ந்தாலே நாடு தாங்காது என்று கூறுகின்ற அளவிற்கு 'கூனல்' மனம் கொண்டோரும், நமக்குப் புதியவர்களல்ல!

அதிகாரச் சீமாட்டி, 'ஆராரோ பாட, அறியாமைத் தொட்டிலில் உறங்கிக் கிடந்த ஓரிரு 'அரசியல் குழந்தை'களும் திரையுலக எதிர்ப்பாளர் பட்டியலிலே, தங்கள் 'திருநாமத்தையும்' பதித்துக் கொள்ளத் தவறினார்கள் இல்லை!

அந்தத் தோற்றவர்களின் சபாமண்டபத்திலேதான், மத்திய சர்க்கார் உதவி தொழில் மந்திரியார் தனக்கும் ஒரு இடம் பிடித்துக் கொண்டிக்கிறார்'

தேடிவந்த காசையெல்லாம், தேவாலயத்தில் சூடம் வாங்கி எரித்து விட்டு, தேம்பியழும் 'ஆனந்தர்'களை, தொழிலாளரிடையேமுதல் முதல் அறிமுகப்படுத்தி வைத்தது வெள்ளித்திரை!

ஆயிரம் ஏடுகளால் உணர்த்த முடியாத அத்தகைய கருத்துக்களைக் கூட ஓரிரு காட்சிகள் மூலம், தொழிலாளர்களுக்கு உணர்த்தி அவர்கள் பாதையிலே ஒரு திருப்புக் கட்டத்தைஉண்டாக்க முயன்றிருக்கிறது திரையுலகு!இந்த நேரத்திலே 'திரையுலகை நோக்கி முகம் திருப்பாதே' என்று உபதேசிக்கிறார் மந்திரியார்!

'தொழிலாளர்கள் சினிமா முதலியவைகளில் தங்கள் செல்வங்களை வீணாக்காமல் சேமித்து, நாட்டின் பல பாகங்களுக்தம் சென்று ஆங்காங்கே ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைப் பார்வையிடலாம்' தொழிலாளர் மத்தியிலே மந்திரியார் வீசிய திருவாசகம் இது!

திருப்பதிக்கும்—திருத்தணிக்கும் கடன் பட்டாவது காவடி தூக்கிச் செல்லுகிறானே அந்த தொழிலாளியைப் பற்றியோ, காஞ்சி 'காமாட்சி'யிடமும், மதுரை 'மீனாட்சி'யிடமும், நெஞ்சத்தை அடகு வைத்துவிட்டு, அம்மையே! அப்பா!' என்று பாடிக் கொண்டு பணத்தையும் பகுத்தறிவையும், இழந்து உழலும், தொழிலாளர்களைப் பற்றியோ இவர்களுக்குக் கவலை கிடையாது!

'சினிமாவை விடு' என்று உபதேசிப்பவர்களுக்கு—

'சூடத்தை விடு-சூரைத்தேங்காய் உடைக்காதே' என்று கூறுமளவிற்கு ஏனோ 'திராணி' இல்லாமல் போய் விடுகிறது!

புது வாழ்வு!

-- அல்லி --

வெயில் மிகவும் தீவிரமாக இருந்தது. ஒருகையிலே குடை; மற்றொரு கையில் செருப்பு; இடையில் இதோ விழுந்து விடுவேன்'' என்று அச்சுருத்திக் கொண்டிருக்கும் நோட்டுப் புத்தகங்கள். இத்தகைய அலங்காரத்துடன் நான் நடந்து கொண்டிருந்தேன்—இல்லை-குதித்துக் கொண்டிருந்தேன்! அச்சமயம் என்னைப் பார்ப்பவர்கள் நான் ஏதோ புதுவித நடனம் பயிலுகிறேன் என்றுதான் எண்ணுவார்கள். கொதித்துக் கொண்டிருந்த கருங்கல் தரைதான் என்னை இப்படி 'ஆட' வைத்தது. காலில் அணிந்து கொள்ளச் செருப்பா இல்லை? இதோ, இடது கையில் ஒருசோடி செருப்பு தொங்கிக் கொண்டிருக்கிறதே! 'கையில் செருப்பிருக்கையில் இப்படிக் கால் கொதிக்க நடக்க உனக்குப் பயித்தியமா?' என்று கேட்கிறீர்களா? பயித்தியம் எனக்கல்ல, குருக்களுக்கு—தீட்சதர்களுக்கு! எங்கேயோ ஒரு மூலையில் ஒரு கல் இருக்கிறதாம்! அதற்காக அவ்வழியாகச் செல்பவர்கள் செருப்பு அணிந்து கொண்டு செல்லக் கூடாதாம்! உயிரில்லாத கற்சிலைக்காக உயிருள்ள மனிதர்கள் துடி துடிக்க வேண்டுமாம்! எவ்வளவு உயர்ந்த (!) மூளை பார்த்தீர்களா? அந்தக் கோயில் ஊரின் நட்ட நடுவில் கட்டப்பட்டுள்ளது. ஆகவே பலரும் பலப்பல இடங்களுக்கும் அதில் நுழைந்து தான் செல்ல வேண்டியிருக்கும். கோயில் முழுவதும் கருங்கல் தரை கோயிலுள்ளே போகாமல் சுற்றிக் கொண்டு போகலாம் என்றால் பள்ளிக்குச் செல்வதற்குள் நேரமாகி விடும்.

தினமும் ஒரு மணி வெய்யலில் இப்படித்தான் கொதிக்கும் தரையில் போக வேண்டியிருக்கிறது. பகலில் சாப்பாடு எடுத்துப் போகவும் வழியில்லை. அப்பப்பா! அன்று சித்தியிடம் இதைப் பற்றிப் பேசி விட்டு நான் பட்டபாட்டை இப்போது நினைத்தாலும் உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்குகின்றன! 'உனக்குச் சோறு வாங்கிக் கொட்டுவதற்கே என் இடுப்பு ஒடிந்து போகிறது. இனிமேல் எடுத்துப் போக வேறே ஏதாவது பண்ண வேண்டும் என்றால் நான் சாக வேண்டியதுதான்! 'ஏதோ போனால் போகிறது. பாவம், அனாதை என்று வீட்டிலே வைத்துக் காப்பாற்றினால் தலைமேலே ஏற வந்து விட்டாயா?' என்று ஆரம்பித்த சித்தி மூன்று நாட்களுக்கு அந்தப் பாட்டை நிறுத்தவே இல்லை.

கால் தரையில் பதிய மறுத்து விட்டது. 'விர்' என்று வீசிய அனற்காற்று, குடையை எங்கேயோ இழுத்துப் போக முயன்றது அதிலிருந்து குடையை மீட்க முயன்றபோது இடையில் இருந்த புத்தகங்கள் நழுவிப் 'பொத்'தெனக் கீழே விழுந்தன. எனக்கு வந்த ஆத்திரத்தில் கையிலிருந்த செருப்புகளை உள்ளே வீசி எறிய வேண்டுமென்று தோன்றியது. அப்படிச் செய்துமிருப்பேன். ஆனால் பள்ளிக்குப் போக நேரமாகிவிடுமே என்றுதான் பேசாமல் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு மேலே சென்றேன்.

இது இன்று நேற்று நடப்பதல்ல; ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக இதே கதைதான் நடைபெறுகிறது. எத்தனையோ இளம் பெண்கள் இருக்கிறார்கள் இந்த மனித சமுதாயத்திலே. பலர் பிறருடைய ஆதிக்கத்தில் அடங்கி அல்லற் படுகிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் அவர்கள் அல்லலுக்கு ஒரு முடிவு உண்டு. மணம் செய்துகொண்டு கணவனுடன் சென்றுவிட்டால் பிறகு அவர்களுக்கு இந்தத் தொல்லை ஏது? ஆனால் என்னுடைய துன்பத்திற்குத்தான் எல்லையே கிடையாது. காரணம்...... காரணம்...... நான் கைம்பெண்!

நான் என்னுடைய தாயார் தகப்பனாரிடம் மிகவும் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தபோது அந்தப்பயங்கர நிகழ்ச்சி நடந்தது. அப்போது எனக்குப் பத்துவயது. நான்காவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.

வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருந்தது. நான் மிக அக்கரையாக பாடத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எங்கள் வீட்டுவேலைக்காரி என்னை அழைத்துப்போக வந்தாள். ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார், எனக்கு ஒன்றும் புரியவில்லை. புத்தகங்களை வாரிப் பையில்திணித்துக்கொண்டு வேலைக்காரியைப் பின் தொடர்ந்தேன். வழியில் வேலைக்காரியிடம் எவ்வளவு முறை கேட்டும் சரியான பதில் கிடைக்கவில்லை.

வீட்டு வாசற்படியில் காலை வைத்ததும் அம்மா ஓடிவந்து என்னை அணைத்துக் கொண்டு 'ஓ' வெனக் கதறி அழுதார்கள். எனக்கு அங்கு என்ன நடந்திருக்கும் என்று யூகிக்கவும் முடியவில்லை. அப்பா இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தேன். கூடத்தில் என் அருமைத் தந்தையார் துண்டினால் வாயை மூடிக் கொண்டு பொருமிப் பொருமி அழுது கொண்டிருந்தார்.

''என்னம்மா நடந்தது? சொல்லேன், சொல்லேன்'' என்று அம்மாவை உலுக்கிய நான் காரணம் புரியாமலேயே அழத் தொடங்கி விட்டேன்.

''செல்வமணி செத்துப்போயிட்டானடி!'' என்று கதறிக் கொண்டே தரையில் 'தொப்'பென உட்கார்ந்து விட்டார்கள் அம்மா.

செல்வமணி! யார் அது? எப்போதோ இந்தப் பெயரைக் கேட்டிருக்கிறேன். இப்போது நினைவுக்கு வரவில்லை.

''அவன் செத்துப் போனால் உனக்கென்ன? நீ வா அம்மா'' என்று அன்போடு அம்மாவின் கையைப் பற்றினேன்.

''அடிப் பைத்தியமே! அவன் உன் புருஷனடி! இனிமே நீ விதவை! வாழாதவள்! தாலி அறுத்தவள்!'' என்று கண்டபடி கத்தி தலையிலடித்துக் கொண்டார்கள் அம்மா.

திகைத்துப் போய் நின்றிருந்த என்னை என் தந்தையார் உள்ளே அழைத்துப் போனார்.

மெள்ள மெள்ள எனக்கு விவரம் தெரிந்தது. என் பெற்றோர் பழமை மோகம் கொண்டவர்கள் அவர்களுக்குத் தகுந்தவர்களாக செல்வமணியின் பெற்றோரும் பழமைப் பிசாசுகளாக இருந்தனர். இருவருடைய பெற்றோரும் எங்கள் திருமணத்தை நடத்திவிட நிச்சயித்தனர். அப்போது என் வயது இரண்டு; செல்வமணியின் வயது ஆறு! என் தகப்பனாரிடம் அப்போது தேவையான பணம் இருந்தது. ஆகவே எங்கள் திருமணம் வெகு விரைவிலே நடந்து முடிந்தது. ஆனால் அந்தோ! ஏதோ ஒரு பொருள் பற்றி என் தந்தையாருக்கும் செல்வமணி தகப்பனாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அது பெரிய சண்டையில் முடியவே, தன் மகனை அழைத்துக் கொண்டு அவர்கள் அன்றே ஊருக்குச் சென்று விட்டனர். அதன்பிறகு அவர்களுடைய தகவல் செல்வமணியின் மரணத்திற்குப் பிறகே தெரிந்தது!

செல்வமணி இறந்து போனதில் எனக்கு வருத்தம் ஏற்படவில்லை; கோபம்தான் வந்தது. அவன் காரணமாகத்தானே எனக்கு அணிகளையும் அழகுச் சாதனங்களையும் இழக்க வேண்டிவந்தது! நாள் தோறும் என்னைத் தேற்றுவதே என் தாயாரின் வேலையாகப் போய்விட்டது. ஒருநாள் மலர் வேண்டும் என்று அழுவேன்: மற்றுமொரு நாள் பொட்டு வைத்தால்தான் பள்ளிக்கூடம் போவேன் என அடம் செய்வேன் என்னைப் போன்ற பெண்கள் நாளுக்கொரு அலங்காரம்செய்து கொள்ளும்போது நான் மட்டும் ஏன் இப்படி வெகு சாதாரணத்துடன் இருக்க வேண்டும்? இதை நினைக்க நினைக்க எனக்கு ஆறவேயில்லை.

என் பெற்றோர் என் துயரத்தைத் தணிக்கத் தம்மாலனதையெல்லாம் செய்தார்கள். நானும் ஓரளவு என் துன்பத்தை மறந்திருந்தேன். அது பொறுமல்தானோ என்னவோ, வைசூரி என் பெற்றோரை ஒருவர் பின் ஒருவராக விழுங்கிவிட்டது. எட்டாவது வதப்பை முடிக்கும் தறுவாயில் நான் தாய்தந்தையற்ற அனாதையானேன்.

என்னுடைய தந்தையாருக்கு தம்பி ஒருவர் உண்டு. அவருக்கும் என் தந்தையாருக்கும் சிறுவயதிலிருந்தே ஒத்துவராது. ஆனால் ஊர் வாய்க்கு அஞ்சி, அவர் வேண்டா வெறுப்போடு தம்பிடம் அழைத்துக் கொண்டார். இந் நிலையில் என்னை மேலே படிக்க வைப்பார்களென்று எதிர்பார்க்க முடியுமா? என்னைத் தொலைத்துத் தலை முழுகிவிடவும் வழியில்லை. நான் மணமாகதவளாக இருந்திருந்தால் யாராவதொரு கிழவனிடம் தள்ளி சுமையை இறக்கிக் கொள்வார்கள்.

என் தந்தையார் வைத்திருந்த சிறு தொகை இ. எஸ். எல். சி. தேர்வு எழுதவும், ஆசிரியர் பயிற்சிக்கு செல்லவும் உதவியது. நான் அவ்வூரிலேயே உள்ள ஒரு பள்ளியில் நான்காவது வகுப்பின் ஆசிரியையாக நியமிக்கப் பட்டேன், சம்பளம் முழுவதும் என் சித்தியின் கைக்குப் போய்ச் சேர்ந்தது. ஆனால் பேச்சு மட்டும் பணம் முழுவதையும் நானே எடுத்துக் கொள்வது போலவும் சித்தி 'போனால் போகிறது' என்ற தயாள சிந்தையுடன் என்னை வளர்ப்பது போலவுமே இருந்தது.

'டண்டண்' என்ற மணியோசை பள்ளி நெருங்கிவிட்டது என்பதை உணர்த்தியது; நான் சட்டெனச் சிந்தனை உலகத்திலிருந்து விடுபட்டேன். இவ்வுலக உணர்வு சற்றும் இல்லாதிருந்த என்னை என் கால்கள் பழக்கத்தின் காரணமாகப் போக வேண்டிய இடத்திற்கு இழுத்து வந்துவிட்டன!

அவசரமாக வதப்பில் நுழைந்தேன். வகுப்பில் ஒரே இரைச்சல். மேசை மீது இரண்டு தட்டுத் தட்டி இரைச்சலை அடக்கினேன். உள்ளத்தில் எழும்பிய பேரிரைச்சலை மட்டும் என்னால் அடக்க முடியவில்லை.

எல்லா நாட்களையும்விட அன்று ஏனோ மனக்குமுறல் அதிகமாக இருந்தது. பெருமூச்சு அடுக்கடுக்காக வெளிப்பட்ட வண்ணம் இருந்தது. பாடம் நடத்த மனம் சிறிதும் இணங்கவில்லை.

''நேற்று நடத்திய பாடத்தை எல்லோரும் அமைதியாகப் படியுங்கள்'' என்று கட்டளையிட்டு விட்டு நாற்காலியில் சாய்ந்தேன்.

''அக்கா!'' ஒருகுரல் கேட்டது. சாந்தா தன் இடத்தில் நின்று கொண்டிருந்தாள். ''என்ன?'' என்றேன்.

''சுசீலாவைப் பாருங்கள் அக்கா! கதைப் புத்தகங்களை வகுப்பில் கொண்டு வந்திருக்கிறாள்'' என்று புகார் செய்தாள். குழந்தைகளுக்கு எப்போதுமே பிறரைக் குறை கூறுவதில்தான் விருப்பம், குழந்தைகள் என்ன—பெரியவர்களில் கூடச் சிலர் பிறரிடம் குறை காணுவதையே தொழிலாகக் கொண்டிருப்பதை நாம் காணவில்லையா?

''சுசீலா, இங்கே வா!'' என்றேன். கையில் ஐந்தாறு புத்தகங்களை எடுத்துக் கொண்டு தயக்கத்துடன் என் எதிரில் வந்தாள் சுசீலா.

''இதை நான் படிக்கவில்லை அக்கா என் அண்ணா பள்ளிக்கூடம் விட்டதும் அவருடைய நண்பருக்குக் கொடுத்து விட்டு வரச் சொன்னார் அதனால்...'' என்று நடுக்கத்துடன் பேசினாள் சுசீலா. என்ன தண்டனை கிடைக்குமோ என்ற அச்சம் அவளுடைய தொண்டையை அடைத்து விட்டது போலிருக்கிறது. என் உள்ளம் நெகிழ்ந்தது.

புத்தகங்களை வாங்கி மேசை மீது வைத்து விட்டு, ''பள்ளிக்கூடம் விட்ட பிறகு எடுத்துப் போகலாம், போய் பாடத்தைப் படி'' என்றேன். அவள் சென்றபின் புத்தகங்களைப் புரட்டலானேன். ஆசிரியர்களின் பெயர்கள் பாரதிதாசன், அண்ணாதுரை, — இப்படியிருந்தன. ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தேன் அவற்றிலிருந்த எழுத்துக்கள் என் உள்ளத்தில் எழுப்பிய புயலை என்னென்பேன்! புரட்சிக் கவிஞரின்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

★ நிர்வாணச் சாமிகள்! ★

நாகரீகம் உணர்ந்தோரை யெல்லாம் தலை குனியச் செய்த 'கும்பமேளா' 'பாரத்' சரித்திரத்தில் ஒரு பக்கத்தைக் கறைபடுத்திவிட்ட செய்தியை நாடு மறந்திருக்காது!

அதைத் தொடர்ந்து, ஆடைகளைக் களைந்துவிட்ட ஆணங்குகள், பிறந்த மேனியர்களாய் நிர்வாண கோலத்தில் ஜோத்பூர் சுடுகாட்டை நோக்கி. பவனி சென்ற, குட்டி கும்பமேளா'வையும் யாரும் மறந்திருக்க முடியாது!

முன்னது, பகலில் பண்டாரங்களின் நிர்வாணப் படையெடுப்பு!

பின்னது, பாதி ராத்திரியிலே, பிறந்த கோலத்தில் 'பாவையர்கள் நடத்திய பவனி! நினைக்கவே நெஞ்சு குலுங்கும், இரண்டு சம்பவங்களுக்குமே காரணம், 'அவன்'!

'ஆசிய ஜோதியின்' கரங்குலுக்கிய உலக நாடுகளுக்கெல்லாம் இந்தக் 'குமட்டல்' செய்திகள் எட்டியிருந்தால், கைகுலுக்குவதற்கு மாறாக கண்களைப் பொத்திக் கொண்டிருப்பர் 'அய்யோ ஆபாசமே' என்று கைகொட்டி கேலி செய்திருப்பர் மோதிலால் மைந்தரைப் பார்த்து!

நாட்டின் மானத்தை மதத்தின் பேரால் ஏலம் விடுகின்ற இத்தகைய இழி செயல்களை கண்டிக்கவோ, தடுக்கவோ, கையாலாகாத 'கனம்'கள் விடுதலைக் கிளர்ச்சி நடத்துபவர்கள் மீது ஏசல்கணை தொடுப்பதற்கு, வெட்கப்படுவதில்லை!

★

கும்பமேளாவில் ரத்தச் சகதியிலே புரண்டு ஆபாசக் கூத்தாடிய 'அதே மனம்' கொண்டோர் அடுத்த மாதம் குடந்தையிலே அழுக்குசேற்றிலே தலை முழுக்கு போட விருக்கிறார்களாம்!

'இந்து மதத்திலே ஆபாசமே கிடையாது, இது சத்தியம்!' என்று சித்தத்தை சிவனடியார் மீது வைத்து சத்தமிட்டு சொன்னாராம் ஒரு பக்தர்! அன்பர் அதோடு விட்டாரே—அரை பலம் கற்பூரத்தையும் வாங்கி அடிக்காமல், அந்த அளவில் நமக்கு மகிழ்ச்சிதான்! பக்தர் இந்த 'சாக்கடைத் திருவிழாவிற்கு' யாது பதிலிருப்பரோ நாமறியோம்!

குடந்தையிலே நடைபெற விருக்கும் 'மகா மகத்திற்கென' 'மதச்சார்பற்ற' நம் சர்க்காரும் தங்களால் இயன்ற 'உபயம்' செய்திருக்கிறார்கள்.

குடந்தையை நோக்கி 'ஞானம்' தேடிச் செல்லும் கூட்டத்தினரின் வசதியைமுன்னிட்டு. ஏழு நிமிடங்களுக்கு ஒரு ரயிலை விடப் போகின்றனராம்! ரயில்வே நிர்வாகிகள்—வாழ்க ஸ்டீவன்சன்! (ரயிலைக் கண்டு பிடித்தவன்.)

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 'பொற்றாமரைக்'குளம் நோக்கிப் புதியபாதை ஒன்றும் அமைக்க முன் வந்து விட்டனராம் நகரசபையார்!

'பகவத் காரியமல்லவா' கொஞ்சம் தாராள மனத்தோடு இரும்புப் பெட்டியில் (மக்கள் வரிப்பணத்தில்) கைவைத்திருக்கிறார்களாம்!

அதற்கென்றே உலவும் சில தேசிய ஏடுகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கொட்டைத் தலைப்பிட்டு 'பக்திரசம்' பொங்க, 'குடந்தைக் கும்பமேளா' விற்கு இப்பொழுதிருந்தே 'திருப்பள்ளி எழுச்சி' பாடத் தொடங்கி விட்டன!

நெஞ்சிலே கொழுந்து விட்டெரியும் 'அறியாமைத் தீயை' வளர்த்துக் கொண்டோர் கூடவிருக்கின்ற குடந்தையின் தெருக்களிலே தீயணைக்கும் படையினர் தயாராக நிற்கின்றனராம்!

கூட்டத்தோடு கூட்டமாய்க் கையிலே 'கத்தரிக்கோலுடன்' திரிந்து கொண்டிருப்பவனின் பசித்தீயை அணைப்பதற்கோ, அல்லது 'அம்பாளின் முகம் கிடக்கட்டும் அந்த 'அழகியின்' முகத்திலே எப்படி இருக்கிறதுபார் தேஜஸ்'! என்று கூறிவிட்டு பெரு மூச்சு விடும் 'பெண் வேட்டைக்காரரின்' இதயத்தீயை அணைப்பதற்கோ-அன்றி எதற்கோ அந்த தீயணைக்கும் படையினர்? நமக்குத் தெரியாது!

★

இதயங்களிலே. மலையத்தனை அறியாமைச் சேற்றைப் பூசிக் கொண்டிருப்பவர்கள் 'மகாமகத்துக்' குளத்திலே இருந்த சேற்றை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டனராம்! செந்தாமரைக் குளத்திலே 'பக்தர்கள்' வசதியாகப் புரள வேண்டாமா? அதற்காகத்தான் இத்தனை திருப்பணிகளையும் மின்னல் வேகத்தில் செய்து முடித்திருக்கிறார்கள்!

'காரியங்கள் கன வேகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன' இப்படி எழுதுகிறது ஒரு தேசிய ஏடு!

மனதை 'மதவெறி' அழுத்திக் கொண்டிருக்கும்போது கன வேகத்தில் என்ன? காற்று வேகத்தில்கூடத்தான் காரியங்கள் நடைபெறும்! இதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

சரிந்து விட்ட சமுதாயம், பண்டைய நெறிகளை மறந்து விட்ட திராவிட இனம் தங்கத் தட்டிலிருந்து புரண்டு, சளுதனத் தொட்டியில், ஊஞ்சலாடுகின்ற இந்த சீர்கேட்டை எண்ணி கண்ணீர் வடிக்கின்ற அறிவுலகை நோக்கி 'அலட்சியப் பார்வை'யை வீசுகிறது ஆதிக்க பீடம்!

தமிழர் சரித்திரத்தில் துடைக்க முடியாத மாசு, குடந்தையிலே நடக்க விருக்கும், மகாமகம்!

தென்னவரின் புகழேட்டில் ஒரு கரும்புள்ளி இந்தக் குடந்தைக்கூத்து!

'சீனத்து தாழ்வாரங்களிலே கீர்த்தி பாடும் உங்கள் நாகரீகம்!

பாபிலோனிய மண்டபங்களிலே பாட்டிசைக்கும் உங்கள் பண்பட்ட இன உணர்வு!

ரோமாபுரி அரண்மனைகளில் எழுச்சி மீட்டும் உங்கள் கலைத்திறன்!

இலக்கியச் சந்தையிலே மணம் பரப்பும் உங்கள் இன முழக்கம்!'

எங்கே? எங்கே?

உலகம் கேட்கிறது. ஊர் சிரிக்கிறது!

என்றாலும், ஊரடங்கிய இருட்டில், உடைகளைந்த 'துறவி'களுக்கு 'தேரோட்டம்' நடைபெற விருக்கிறதாம்! இந்த 'கூவத்'து செய்தி நல்லறிவாளர்களின் இதயத்தை யெல்லாம், குட்டுக்கோல் கொண்டு குத்துகிறது!

உயிரோட்டம் நின்று விட்ட பிணத்தைக்கூட, உடையில்லாமல் காணச் சகிக்காத தமிழர்கள்தான் அன்று—வடக்கிலே இருந்து வரும் 'நிர்வாண பிம்பங்கள்' சிலதுக்கு வரவேற்பு கூறப் போகிறார்களாம்!

பகலிலே அல்ல!

பாதி ராத்திரியில்!

'அய்யனையும்—அம்மையையும்' ஆட விட்டு ஆனந்தக் கூத்தாடும் பக்தகோடிகள், இரவோடு இரவாக—கோட்டான் குரல் எழுப்புகின்ற வேளையிலே 'நவீன காட்டு மிராண்டிகளை'க் கண் கொட்டாமல் தரிசிக்கப் போகின்றனராம்! அந்தோ பாவம்!

'கண்டேன் அவர் திருப்பாதம்' என்று முணு முணுப்பரோ!

'கண்டறியாதனக் கண்டேன்!' என்று முகாரி வைப்பரோ! நாமறியோம்!

காட்டுமிராண்டிகள்—என்று நம்மைப் பார்த்துக் குறிப்பிட்ட, 'பாரத ஜோதி'யாம் நேரு பண்டிதர் வாழ்கின்ற வடக்கிலிருந்து—மகாமகத்தன்று, குளத்திலே முழுக்குப் போடுவதற்காக 'நிர்வாணச் சாமிகள்' வரப்போகிறார்களாம்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

பொன்மலையில் புதுவழி கண்டனர் !

பொல்லாதார் உறவுதனை அறுத்தனர் !

தொழிற் சங்கங்கள் சுதந்திர மாக இயங்கவேண்டும், எந்த அரசி யல் கட்சியின் ஆணைக்கும் அடி பணிந்து இயங்கக் கூடாது என்ற உன்னத கொள்கையின் மீது அமைக்கப்பட்டு தொழிலாளர்களு டைய பொருளாதார சமுதாய முன் னேற்றத்திற்காக உழைப்பதென்ற இலட்சியத்துடன் 'தென்பகுதி ரயில் வே மென்ஸ் யூனியன்' இயங்கி வந்தது. இதன் சிறந்த கொள் கையின் காரணமாக பொது மக் களிடம் பேராதரவு கிடைத்தது. ஆனால் ஆதரவு கொடுத்து வந்தவர் களில் முக்கிய கட்சியினரான திரா விட கழகத்தவர், கட்சியின் ஆணை யின்படி எஸ். ஆர். எம். யு. இயங்க வேண்டுமென வலியுறுத்தி அதற்கு ஆதரவாகஉள்ள சிலரைக்கொண்டு கட்சியின் ஆணையை ஏற்க மறுத்த வர்களை தாக்கும்படியான பலாத்கார செயலில் ஈடுபட்டனர். எனவே திராவிட கழகத்தின் ஆதிக்கத்தை ஏற்க மறுத்த 15 கிளைகள் சேர்ந்த தொழிலாளர்கள் 22-1-56 முதல் தென்பகுதி ரயில்வே யூனியன் (எஸ். ஆர். யு) என்ற யூனியனை அமைத்தனர். தென்பகுதி ரயில்வே யூனியன் (எஸ். ஆர். யு) கீழ்கண்ட வைகள் வெற்றியடைய தன் முழு சக்தியையும் உபயோகப்படுத்தும்:-

1. 800 கோடி ரூபாய் மூலதனத் தில் நடத்தப்படும் ரயில்வேயில் அதில் பணி செய்யும் பத்து லட்சம் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் யாதொரு பங்குமில்லாத காரணத் தால், ரயில்வே தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. நிர்வாகத்தில் தொழிலாளர்களுக் கும் பங்கிருந்தால் இந்நிலை ஏற் படாது. எனவே ரயில்வேத் தொழி லாளர்களுக்கு ரயில்வே நிர்வாகத் தில் பங்கு கேட்பது.

2. எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, எட்டுமணி நேர, உல்லாச வாழ்க்கை என்ற அடிப்படையில் எல்லா ரயில்வேத் தொழிலாளர்களுக்கும் தினம் எட்டு மணி நேர வேலைதான் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த நாகரீக காலத்தி லும் தினம் பனிரெண்டு மணிவேலை வாங்குவதை ஒழிப்பது.

3. 'செக்யூரிடி போர்ஸில்' வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கங்களில் சேர இருந்த உரிமையை பறிமுதல் செய்துள்ள தை எதிர்த்துப் போராடி, அவர்கள் தொழிற்சங்கங்களில் சேர உரிமை பெறுவது.

4. ரயில்வேத் தொழிலாளர்கள் நாடு பூராவும் பரவியுள்ளவர்கள். நவீன வசதிகள் எதையும் அனுப விக்க முடியாதவிடங்களிலெல்லாம் இரவு பகலாக பணி செய்பவர்கள். இத்தகையோர்கள் பெருத்த இன் னல்களிடையே வாழ்நாள் பூராவும் பணி செய்தும், இவர்களுடைய பிள்ளைகளுக்கு ரயில்வேயில் வேலை கிடைப்பதில்லை. ரயில்வே தனிப்பட்ட கம்பெனியால் நடத்தப் பட்டபோது இச்சலுகையிருந்தது. ஆனால் அரசாங்கம் ரயில்வே நிர்வா கத்தை எடுத்துக் கொண்ட பின் இச்சலுகையை எடுத்து விட்டது மீண்டும் இச்சலுகை பெற்று ரயில் வேத் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு ரயில்வேயில் காலி யாகும் வேலைகளில் 75 சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத் துவது.

5. எல்லாத்தொழிலாளர்களுக் கும் வேலைநேர உடை பெறவும், காங்கித் தொழிலாளர்களுக்கு செருப்பு, நைட் பெட்ரோல் அல வன்ஸ் முதலியவைகள் பெறுவது டன் காங்கி நீளத்தை மூன்று மை லாகக் குறைக்க வலியுறுத்துவது.

6. எல்லா ரயில்வேத் தொழிலா ளர்களுக்கும் இலவச வீட்டு வசதி பெறவும், அதுவரை 31-12-45 வரை இலவச வீட்டு வாடகை சலு கை பெற்று வந்தவர்கள் தொடர்ந்து அச்சலுகை பெறுவார்கள் என்ற உத்திரவு அமுலாக்கப்பட்ட தேதி வரை இல்வச வீட்டு வாடகை சலு கை பெற்றுவந்தவர்களும் அச்சலு கை பெறுவது.

7. பல ஆண்டுகள் பணிசெய்து நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் மேல் வேலைகளுக் காத்துக் கொண்டிருக் கும்போது அவர்களுக்கு உத்தி யோக உயர்வு கிடைக்காத வகை யில் நேரடி நியமனம் செய்வதை ஒழிப்பது, மேலும் செலக்ஷன்முறை அதிகாரிகளின் உறவினர்களுக்கு மேல் வேலை கொடுக்க நல்ல சாதன மாயிருப்பதால் அத்தகைய முறையையும், 'ஈ. பி டிரேட்டெஸ்ட்' முறையையும் ஒழிப்பது.

8. டிரைவர், கார்டு, பயர்மென் போன்றவர்களுடன் பணி செய்யும் பிரயாணச் சீட்டு பரிசோதகர்களை யும் (டி. டி. ஈ. எஸ்) ரோட்வான் போர்ட்டர்கள், ரோட்வான் கிளார்க் குகள், முதலியவர்களையும் ஓடும் தொழிலாளர்களாகப் பாவித்து அவர்களுக்கும் ஓடும் தொழிலாளர் களுக்கு (ரன்னிங் ஸ்டாப்) உள்ள சலுகைகள் பெற ஆவன செய்வது.

9. உத்தியோகத்திலிருந்த காலத் தில் தொழிலாளர்கள் செய்த குற் றத்திற்காக தண்டிக்கப்படுகிறார்கள் அது போதாதென்று அவர்கள் ஓய்வு பெற்றுக் கொள்ளப்போகும் போது ஊழியம் செய்த காலத்தில் செய்த குற்றத்திற்காக கிடைத்த தண்டனையை கணக்கெடுத்து கிராஜுட்டியை குறைக்க அதிகார மளிக்க உள்ள உத்திரவை ரத்து செய்யப்பாடுபடுவது.

10. ரயில்வே வைத்தியமனைகள் பல உள்ளனவேயொழிய, அவை களில் போதிய வைத்திய வசதி யில்லை நல்ல மருந்துகள் இல்லாத காரணத்தால் தொழிலாளர் வெளி யில் வாங்கிவரச் சொல்லப்படுகிறார் கள், அவைகளையும் நல்லமுறையில் பயன்படுத்த வசதியில்லை. போதிய படுக்கை வசதிகள் இல்லாத கார ணத்தால் பெரும்பாலோர் தரையில் பாய்போட்டு படுக்க வைக்கப்படு கிறார்கள். இந்த கொடுமையை எதிர்த்துப் போராடி நல்லவைத்திய வசதி பெறுவது.

இந்த சிறிய சலுகைகள்கூட லய னில் உள்ள ஊழியர்கள் பெறமுடிவ தில்லை. இவர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டால் உடனடியாக மருத்துவ உதவி கிடைப்பதில்லை. சில சமயங்களில் நூறுமைல் பிரயா ணம் செய்து வரவேண்டியுள்ளது. இதனால் வியாதி அதிகரிக்கிறதே ஒழிய குணப்படுவதில்லை. அதனால் லயனிலுள்ள தொழிலாளர்கள் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெறும் வகையில்' 'மொபைல் மெடி கல்வான்' ஏற்பாடுசெய்ய நிர்வாகத் தை கேட்பது.

11. பெரம்பூர், பொன்மலை போன்ற ஓர்க் ஷாப்புகளில் பலர் டெம்பரரியாகவே பிரமோஷன் செய்யப்பட்டுள்ளனர். பல ஆண்டு களாகியும், இவர்கள் மேல்பதவியில் பர்மனென்ட் செய்யப்படவில்லை. மேலும் ஓர்க்ஷாப்பிலும், மற்று முள்ளவிடங்களிலும் அய்ந்தாறு ஆண்டுகாலமாக பணிசெய்தும், பலர் வேலை பர்மனென்ட் செய்யப் படாமல் பணிபுரிகின்றனர். இவர் களை எல்லாம் உடனடியாக பர்ம னென்ட் செய்ய ஆவன செய்வது மற்றுமுள்ள குறைகளைத் தீர்க்கவும், எல்லா நடவடிக்கையும் எடுப்பது.

12. ரயில்வே தொழிலாளர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் அவர் கள் குழந்தைகளின் கல்வி பாதிக் கப்படுகிறது. அதிலும் இடை ஸ்டேஷன்களில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு எவ்வித வசதியும் கிடையாது.

எனவே ரயில்வே தொழிலாளர் களின் குழந்தைகள் படிப்பதற்கு பள்ளிகளும் அத்துடன் இருக்க வசதியும், உணவு வசதியும் ஏற் படுத்த நிர்வாகத்தை வற்புறுத்து வது.

13. இன்றுள்ள வைத்திய சோதனைமுறை தொழிலாளர்க ளுக்கு மிகவும் பாதகம் விளைவிப்ப தாக உள்ளது. அதை திருத்தி அமைத்து ஏற்கனவே பிட் செய்யப் பட்ட வகுப்பிற்கு கீழ் வகுப்பிற்கு பிட் செய்யப்பட்ட தொழிலாளர்க ளுக்கு சம்பளம் பாதிக்கப்படாத வகையில் மாற்றுவேலை கொடுக்கச் செய்யவும், எல்லா வகுப்பிற்கும் சரியில்லையென முடிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ரிடையராக வேண்டிய காலம் வரையிலாவது (55 வயது) பென்ஷன் போன்ற சலுகை பெறவும் போராடுவது.

14. ரயில்வே சீரமைப்பு வேலை கள், வீடு கட்டுதல், பாலம் போடு தல் போன்றவைகளை கண்ட்ராக்ட் டில் விடும் முறையை ஒழித்து அவைகளுக்கென தனி இலாகாவை ரயில்வே நிர்வாகமே நடத்த வேண் டுமென வற்புறுத்துவது.

15. குறைந்தபட்ச சம்பளத்தை அதிகமாக்கும் வகையிலும், அதிக பட்ச சம்பளத்தை குறைக்கும் வகையிலும், சம்பள அமைப்பை மாற்றி அமைத்து சகல தொழிலா ளர்களுக்கும் நியாயமான சம்பளம் கொடுக்க ஏற்பாடுசெய்ய புதிய சம்பள கமிஷன் அமைய பாடுபடு வது.

இத்துடன்தொழிலாளர்கள் மூடப் பழக்க வழக்கங்களில் பொருள் விரையம் செய்வதை தடுக்க பிரச் சார மூலம் இயன்றவரை பணியாற் றும். மேற்கண்ட லட்சியங்கள் வெற்றியடைய சகல சகோதர சங் கங்களின் ஆதரவையும் தேடுவது டன், மற்ற சங்கங்கள் இலட்சியங் கள் வெற்றியடைய செய்யும் கிளர்ச்சிகளில் இந்த யூனியன் பூரண ஒத்துழைப்புத் தரும். இன்றுள்ள அகில இந்திய தேசீய ரயில்வேத் தொழிலாளர் சம்மேள னம் அரசாங்கத்தின் கைப்பாவை யாக இயங்கி வருவதால், ஏழைத் தொழிலாளர்களுடைய குறைகளை புறக்கணித்து விட்டபடியால் முற் போக்காளர்களைக் கொண்ட பலம் வாய்ந்த அகில இந்திய சம்மேளனம் அமைக்க முழு முயற்சி எடுக்கப் படும்.

தொழிலாளர்களிடையே மலிந்து கிடக்கும் கட்சி அரசியல் பூசல்களை ஒழித்து, பிரிந்துகிடக்கும் தொழிற் சங்கங்களையும், சிதறிகிடக்கும் தொழிலாளர் சக்தியையும் ஒன்று படுத்தி ஒற்றுமையைக் வளர்பது என்பதே தென்பகுதி ரயில்வே யூனியனின் (எஸ். ஆர். யூ.) முக்கியமான அடிப்படைக் கொள் கைகளில் ஒன்று.

எனவே ஒரு தொழிலுக்கு (இன்டஸ்டிரி) ஒரு சங்கம் என்ற லட்சியம் வெற்றியடைய என் னென்ன முயற்சிகள் செய்ய வேண் டுமோ, அவ்வளவும் செய்வதுடன் அந்த லட்சியம் ஈடேற யூனியன் தன் முழுசக்தியையும் பயன்படுத் தும். மேற்சொன்ன கொள்கைகள் வெற்றி பெற இரயில்வேத் தொழி லாளர்களும் பொதுமக்களும் முழு ஆதரவு தரும்படி பொதுக்குழு வேண்டிக் கொள்ளுகிறது.

(ஒப்பம்) பொன்—பரமசிவம்.
பொதுச் செயலாளர்

சீ. இராகவானந்தம்
தலைவர்

அடுத்த இதழில்...
மு. க. வின்
★★ சிறுகதை ★★
இடம் பெறும்.

★★★ விடிவது எந்நாளோ ? ★★★

'உலக அரசியல் வானில் உயர உயரப் பறந்து கொண்டிருக்கும் ஆர்க்காட்டாருக்கு-தென்னகத்தை திரும்பிப் பார்க்க நேரமெங்கே இருக்கப் போகிறது!'

'கோலேந்திகளின் கைலாகிலே மயங்கிக்கிடப்பவர்'-கோபுரத்தின் உச்சியிலே பறப்பவர்!

'சேலத்திலே நாமெல்லாம் கூடி பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டும் என்று கூறிய பொழுது-இதெல்லாம் வெறும் ஓலம் என்றுகூறிவிட்டு நம்மிடமிருந்து விலகி நடந்தவர்தானே ராமசாமியார்-அவர் என்ன புதிய மனிதரா?'

என்ற எண்ணம்தான்—நாட்டோரின் நெஞ்சங்களில் நிலவி வந்தது.

'பட்டம்' என்ற மோகினியை விட்டுவிட மனமில்லாமல் நம்மை பிரிந்து விலகிச் சென்றவர் தான் ராமசாமியார்! என்றாலும் வெளியுலக அரசியலில், இந்திய உபகண்டத்திற்கு புகழ் தேடித் தருகின்ற 'தென்னகத்து மனிதர்' என்று உலக நாடுகள் கூறுகின்ற பொழுது நம்மால் பெருமையடையாமல் இருக்க முடியவில்லை.

இந்திய அரசியலுக்கு 'அறிவு தானம்' செய்வதற்கென்று, வடக்கு இழுத்துக் கொண்ட தென்னகத்து அரசியல் மேதைகளில்-சர். ராமசாமி முன்னோடி!

ராமசாமியாரின் காலடிபடாத அரசியல் மண்டபங்கள்; கைகுலுக்காத ராஜதந்திரிகள்; மிகக் குறைவு!

வெள்ளையன் திறந்தபடி விட்டு சென்ற அரசியல் மண்டபத்தில்—இந்திய சர்க்காரால் தென்னாட்டு அரசியல் விற்பனர்களின் தயவில்லாமல் நுழைவதற்கு துணிவு ஏற்படவில்லை!

பனிமண்டலத்தாரை விரட்டிவிட்டு, பதவி நாற்காலிகளைப் பிடித்துக் கொண்ட துரைமார்களுக்கு—ஆட்சி சக்கரத்தைச் சுற்றுவதற்கும்-அரசியல் சட்ட புத்தகங்களைப் புரட்டுவதற்கும் திராவிடத்திலிருந்துதான் மேதைகள் தேவைப்பட்டார்கள்!

இங்கோ, பிறந்த மண்ணுக்குப் பயன்படாமல்—பெற்றவளின் கண்ணீரைத் துடைக்காமல், திறமைமிக்கவர்களெல்லாம் 'எடுப்பார் கைப்பிள்ளைகளாகி' விட்டனரே என்ற குமுறல் திராவிடத்துப் பெருங்குடியினரின் இதயங்களிலே மூண்டது!

'யாருக்கெல்லாமோ' பயன்படுகிறதே கடல் வயிற்று முத்து—என்ற கவலை நமக்கு!

திரைகடலோடி இவர்கள் சேர்த்துவரும் புகழெல்லாம், அன்னையின் அழகு மணிக்கழுத்தை அலங்கரிக்கவில்லையே என்ற ஏக்கம் தாயகத்திற்கு!

'சித்தமுருக்கியிடும்' என் மகனை தத்தம் கொடுத்துவிட்டேனே என்று குமுறியழுகின்ற தாயின் நிலையிலே திராவிடம்!

★

ஆயிரம்தான் இருந்தாலும், அரசபோகத்திலே புரண்டாலும், 'அன்னையின்' நினைவு—'அத்தகையவர்களுக்கும்' சில நேரங்களில் வந்துவிடத்தான் செய்கிறது!

தாய்ப்பாசம்—என்ன சமான்யமானதா?

தான் ஆடாவிட்டாலும் தன் சதைபாடும் என்பார்களே—அந்த முறையில் சென்றகிழமை ஆர்க்காட்டாருக்கு 'சதை' ஆடி இருக்கிறது.

சுயமரியாதை இதயத்தை வேல்கொண்டு தாக்க-காரசாரமாக பேசி இருக்கிறார் ராமசாமியார்!

அவர் வீசிய வார்த்தைகள் தன் மானமுள்ளோரின் ரத்தத்தை சூடேற்றி இருக்கிறது!

பகைக்குலத்தை நோக்கி, பார்வையைத் திருப்பிவிடும் போர் குரலாக அமைந்திருக்கிறது!

நெடுங்காலமாக—நாம் விடுகின்ற பெருமூச்சையே-சற்று பெரிதாக்கிக்காட்டி இருக்கிறார்.

நம் குமுறலையே—கொஞ்சம் கோபம் கலந்த தொனியில் எடுத்துக்கூறி இருக்கிறார்.

நாம் சொன்னவைகள்!

அதையேதான் அவரும் சொல்லி இருக்கிறார்· ஒரேகுரல்! ஸ்தானபேதம்! அவ்வளவுதான்!

''பிரதேசவாரியாக தொழில்களைப் பரவலாக அமைக்கும் முக்கியத்துவம்பற்றி இப்போது பலர் பேசுகின்றனர். ஆனாலும் தொழில் வளர்ச்சியில் தென்னாடு பின் நிற்கிறது. கோவையில் தொழில் வளர்ந்துள்ள தென்றால் அது ஒரே ஒரு துறையில் தான். விவசாய அபிவிருத்தியால் மட்டும் மக்களின் பொருளாதாரநிலை உயர்ந்துவிடாது. பலரகத் தொழில்களிலும் மக்களுக்கு வேலைகொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும்''

'பொதுமக்கள் பிடிவாதமாக வற்புறுத்தாவிட்டால் தென்னாட்டில் தொழிற்சாலைகளை எதிர்பார்க்க முடியாது இதற்காகப் போராட வேண்டும்'

'டில்லி சர்க்கார் இன்னமும் தென்னாட்டவருக்கு எட்டாக்கனியாக உள்ளது முகலாயசாம்ராஜ்யத்தில்தான் தலைநகரம் தென்னாட்டவருக்கு எட்டாக்கனி என்று கூறப்பட்டது. சுதந்திர இந்தியாவிலும் நிலைமை மாறவில்லை!'

'தென்னாட்டவர் சுயஉணர்வு பெற்று டில்லியின் கட்டளையை சிரமேற்கொண்டு நடக்காமல், தன் தேவையை பயமின்றி எடுத்துக்கூற வேண்டும்'

'கல்கத்தா-ஜாம்ஷெட்பூர், பம்பாய், கான்பூர், ஆமதாபாத் இப்படி வடநாட்டிலேயே தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால்-தென்னாட்டின் பொருளாதாரம் எப்படி உயரும்? இதற்காக தென்னாட்டினர் ஒருகுரலாகப் போராட வேண்டும்!'

★

இந்திய உபகண்டத்து அரசியல் சிக்கல்களைக்கூட தீர்த்து வைக்கின்ற அளவுக்கு திறமைமிக்க ஒரு அரசியல் மேதையின் குமுறல்கள்தான் மேலே தரப்பட்டுள்ள வாசகங்கள்!

ஜனவரி 29-ம் நாள் சு. மி, ஏடு 'தென் இந்தியாவின் தொழில் வளர்ச்சி' என்ற மகுடமிட்டு சர் ராமசாமியின் குமுறலை வெளியிட்டிருக்கிறது.

★

தெற்கையும் — வடக்கையும் பிரித்துக்காட்டி, தொழில் வளர்ச்சியில் தெற்கு தேய்ந்து கொண்டிருப்பதையும் —வடக்கில் வளங் கொழிப்பதையும் நாம் சுட்டிக் காட்டும்போது தேள் கொட்டியவர்களைப் போல துடிக்கின்ற 'தேசியவாதிகளின்' பார்வைக்கு — இதை வைக்க விரும்புகிறோம்.

இந்திய அரசு, கல்கத்தா ஜாம்ஷெட்பூர் பம்பாய், கான்பூர், அமதாபாத்' இப்படி 'குட்டி அமெரிக்கா'க்களை வடக்கிலே உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்களாம்! நாமல்ல! உலக நாடுகள் பாராட்டுகின்ற ஒரு அரசியல் விற்பனரின் எச்சரிக்கை!

தென்னகத்திலேயும் ஒரு 'கோவை' இருக்கிறதே என்று கூறிவிட்டு, 'அத்மதிருப்தி' யடைந்து கொள்ளும், காங்கிரஸ் திராவிடர்கள் என்ன சமாதானம் கூறுவரோ-நமக்குத் தெரியாது!

டில்லி-தென்னவருக்கு எட்டாக்கனியாம்!

ஆனால் டில்லிக்கோ தெற்கு என்ற வார்த்தையே எட்டிக் கனியாக இருக்கிறது!

பிறகு எப்படி 'இணைப்பு' ஏற்படும்! இரு துருவத்திற்கும் பாலம் கட்டும் தேசியத் தோழர்கள் இதை உரண வேண்டும்.

'நவாப் தர்பார்' நடத்திய முகலாய ராஜாக்களின் ஆட்சியில் டில்லி எப்படி 'தூரத்து'த் தலைநகரமோ—அதே நிலை தான் சுதந்திர இந்தியாவிலும் உருவாகி இருக்கிறதாம்—உண்மை!

அன்று தென்னகத்தின் கடிவாளம்—லண்டனில்!

இன்று டில்லியில்!

அன்று ஆட்சியும் அதிகாரமும் வெள்ளைத் துரைமார்களிடம்!

இன்று வடநாட்டு நேரு துரையிடம்!

அன்று தென்னகம் லங்காஷையருக்கும், கிளாஸ்கோவிற்கும்—மார்க்கெட்!

இன்று தென்னகம் கல்கத்தாவிற்கும், கான்பூருக்கும் சந்தை!

ஆள் மாராட்டத்திற்கா சுதந்திரம் என்று பெயர்? இப்படிப் பலப் பல எண்ணங்களை தூண்டிவிட்டிருக்கிறது, டாக்டர் ராமசாமியின் பேச்சு!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு அலுவலகம்.

●

திருச்சியில் மே திங்களில் நடைபெறும் தி மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கென 1—2—56 முதல் தனியாக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

மாநாடு சம்மந்தமாக கடிதம் எழுதும் தோழர்கள் இனி கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவேண்டுமென அறிவிக்கப்படுகிறார்கள்.

அலுவலக நேரம்:
காலை 9 முதல் 1 வரை. மாலை 3 முதல் 7 வரை.

செயலாளர்:
தி. மு. கழக 2-வது மாநில மாநாடு,
நெ. 9 கிலேதார் தெரு,
தெப்பக்குளம், திருச்சி.

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

'தென்னாட்டவர் சுய உணர்ச்சி பெற்று டில்லியின் கட்டளைகளை சிரமேற் கொண்டு நடக்காமல்—தேவையை பயமின்றி எடுத்துக் கூறவேண்டும்'

இந்த உரிமைக்குரல் கேட்டு—நம் மாநிலத்து அமைச்சர்களின் இதயக் கதவுகள் திறக்கப்படுமா? என்பது சந்தேகம் தான்!

தென்னாட்டவர்கள் சுய உணர்ச்சி பெற வேண்டுமாம்! என்ன பொருள் இதற்கு—'சுதந்திரக் கொடியை' உயர்த்திப்பிடித்து—சூழ்ந்துள்ளபகைக் கூட்டத்தை சுக்குநூறுக்கி—சுகவாழ்வு, சுயமரியாதை வாழ்வு பெற வேண்டும் என்பதாகத் தானே இருக்க முடியும்!

வடக்கு — தெற்கு பேதங்களை நன்குணர்ந்த நல் இதயம் கொண்டோரெல்லாம், நிலம் மீட்கும்—களப்பணியிலே இறங்கியுள்ள நம் முகாம் நோக்கி—எழுச்சிவாழ்த்துக்களைக் குவிக்கின்றனர்.

'தூரத்துத் தலைநகராம்' டில்லிக்கு இங்கேன் ஆதிக்கம் என்று துந்துபி முழக்கியபடி, புலிநிகர் திராவிடர் பாசறை கதவுகளைத் திறந்தபடி வெளியே வந்து கொண்டிருக்கின்றனர்.

நம்மை நாடு உணர்ந்து கொண்டது!

நம் லட்சியங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன!

நம் திசை நோக்கி மாற்றாரும் முகம் திருப்பி இருக்கின்றனர்!

நாம் கூறிவந்த கருத்துக்களை மறுத்தவர்கள் — மறைத்தவர்கள் அனைவரும் இன்று வாய் திறக்கின்றனர்!

'தென்னகத்திற்கு நீதி வேண்டும்' என்று தேசிய ஏடுகள் தலையங்கம் தீட்டுகின்ற அளவிற்கு நம் கொள்கைகள் வெற்றியடைந்து வருகின்றன.

வடக்கு வேறு-தெற்கு வேறு என்று நாம் கூறியபோது—பிரிவினையா? என்று வினாஎழுப்பியவர்கள்—

இன்று பிரிந்தால்தான் வாழ்வு என்று பேசுகின்ற அளவிற்கு பேதம் வளர்ந்திருக்கிறது!

அதன் விளைவுதான், டாக்டர் ராமசாமியின் கண்டக் குரல்!

வடக்கு குட்டும்போதெல்லாம் குனிந்து கொடுக்கும்—சென்னை மாநிலத்து அமைச்சர்களே! 'பச்சை'த் தமிழரே! காமராசரே! உங்களுக்கும்தான் 'சுய உணர்ச்சி' வரவேண்டும் என்று கூறி இருக்கிறார்!

ஈரோட்டாரல்ல— ஆர்க்காட்டார்! இதயம் உள்ளோரெல்லாம் விழித்துக் கொண்டனர் ஆனால் இந்த மாநிலத்து அமைச்சர்களுக்கோ இன்னும் தூக்கமே தெளியக் காணோம்!

—வில்வம்.

பொன்முடியின் கடிதம்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால். நமக்கோ பெயர் நாத்திகர்கள்!

எப்படி இருக்கிறது பேதம்! குமார், நம் கொள்கைகள், அறிவுலகம் ஒப்புக் கொள்ளக் கூடிய உயிருள்ள கருத்துக்கள் என்றும், இன்றில்லா விட்டால் நாளை அதற்கு மறுநாள்; இப்படி என்றுவது ஒரு நாள் நம் கருத்துக்களை, நாடு ஏற்றுக் கொள்ளத் தான் போகிறது என்று குறிப்பிட்டிருந்தேனே: நினைவிருக்கிறதா?

நேராகவோ, மறைமுகமாகவோ, தங்களை மறந்தோ, நம்மையும், நம் கருத்துக்களையும், எதிர்ப்பவர்களும் வெறுப்பவர்களும்; சில நேரங்களில் நம் கருத்துக்களையே பிரதிபலித்து விடுகிறார்கள்!

ஆச்சாரியாரின் நினைவு மண்டபப் பேச்சும், இதற்கு ஓர் எடுத்துக்காட்டு! அந்த வாசகங்கள், அவர் வாயிலிருந்து வந்தவை அல்ல; வயிற்றிலிருந்து வந்தவைகள்! என்று கூறலாம்!

'ஆத்ம ஒளி' இல்லை; அதனால் **சிலைகளே** வேண்டாம்!

'அறிவொளி' இல்லை, அதனால் **சிலைகளே** வேண்டாம்!

அவர் குறிப்பிட்டது **காந்தியார்!**

நாம் குறிப்பிடுவது**கடவுளர்!**

இதுதான் நமக்கும், அவருக்கும் உள்ள வேறுபாடு!

காந்தியார் நினைவு மண்டபத்தில் 'ஆடும், மாடும்' பொறிக்கப் பட்டுள்ளதாம்;

'மாடு'களைப் பார்க்கும்பொழுது 'ஓட்டுப் பெட்டிகள்'தானே நினைவிற்கு வந்துவிடும்! இங்குள்ள 'பாரத புத்திரர்களுக்கு;' பாவம்! காந்தியாரின் நினைவு எங்கிருந்து வரப்போகிறது!

★

பூ நாகம்—புது வேடம்!

அய்யர் வட்டாரத்து மாங்கனிகள் மயிலென நாட்டியம் ஆடுவதையும்—குயிலெனக் குரலெடுத்துப் பாடுவதையும் விட்டுவிட வேண்டுமாம்!

பேச்சையே கீதமாக்கிக் கொள்ளும் பருவத்துக் கிளிகளும், நடையையே நாட்டிய மாக்கிக் காட்டும் பட்டு நிகர் பாவையர்களும்—இத்தனை நாள் சென்று கொண்டிருந்த பாதையை விட்டு விலகி வாழ வேண்டுமாம்!

'குலநலத்திற்கு' சங்கம், என்ற பெயரால் தங்கள் 'சுயநலத்திற்கு' ஒரு ஜாதியினரை வெட்டுக் காயகப் பயன்படுத்திக் கொள்ளும் 'பரோபகார' சிந்தை கொண்டோரை — அரசியல் வட்டாரத்திலே நாம் சந்தித்திருக்கிறோம்!

அந்தப் பட்டியலிலே புதிய தோழர் ஒருவர் கிளம்பி இருக்கிறார். சமுதாயத்திலேயே மிகமிக ஏமாந்தவர்கள்(!) என்று கருதப்படும் பிராமண குலத்தவர் விழிப்படைய வேண்டுமாம்!

ஏதோ 'அவர்கள்' மீளா உறக்கத்தில் மூழ்கிக் கிடப்பதைப் போல—அவர்தம் எழுச்சிக்கு பரணி பாடியிருக்கிறார்—பிராமணோத்தமர் பாஷ்யம் அய்யங்கார்!

பூதேவர்கள் பூடைசூழ—பூவிழி மாதர்கள் திரண்டிருக்க—இப்படியொரு திருவாசகத்தை சிந்தியிருக்கிறார் சென்னையைச் சேர்ந்த அத்தோழர்!

வாழ்வதற்கென்றே பிறந்த (பிரம்மன் நெற்றியிலிருந்து) ஒரு இனத்தின் 'சுகவாசிகள்' எந்தத் துறையிலே சமுதாயத்தின் பின் வரிசையில் தங்கிவிட்டார்கள்?—என்ற வினாவை நாம் எழுப்பத் தேவையில்லை நாடு அறியும்!

ஈ, புகமுடியாத இடங்களிலெல்லாம்—'அவாள்' இனத்து ஆதிக்கக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறதே!

'பச்சைத் தமிழர்' ஆட்சியானாலும்—'பழுப்புத் தமிழர்' ஆட்சியானாலும்—அந்த இனத்தின், கண் அசைவிற்கும்-கணைப்பிற்கும் தானே-உருவிய வாளைக்கூட உறையிலே போட்டுவிட்டு 'துணிவை' வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறார்கள்! இன்னுமென்ன குறை!

'புனிதபாரத்'தில் ஜாதி-சங்கங்களே கூடாது' என்று பிராமணத் தலைவர்கள் கூறிக்கொண்டிருக்கும்போது 'இளம் பிராமணர் சங்கத்திற்கு' என்ன அவசியமோ-அறியோம்!

'பிராமண சமூகத்தைக் கண்டால் சீறி விழுகிறார்களாம்'—இன்னொரு பத்திரிகாசிரியரின் பேச்சு இது!

'கிட்டே வராதே-எட்டி நில்' என்று இந்த இருபதாம் நூற்றாண்டிலும் எந்த சமுதாயத்தின் மீது 'யார் சீறிவிழுகிறார்களோ' தெரியவில்லை!

அண்மையில்கூட ஒரு 'ஆதித்திரா விடனை-ஆலயத்திற்குள்விட மாட்டேன்' என்றுகூறி தண்டனைக்கு ஆளான 'இனத்தவர்' யாரோ?

'எல்லோரும் சமம்'— என்ற நிலையை உண்மையாகவே வரவேற்பவர்கள் என்றால், முதலில் 'ஜாதியின்' பெயரால் இயங்கும் அந்த சங்கத்தை கலைத்துவிட்டு, சமத்துவக்கோலம் பூணுவதுதானே அறிவுடைமை!

அதை விட்டுவிட்டு பிராமணக் 'குழந்தைகள்'—ஆடுவதையும் பாடுவதையும் விலக்கி-வேத உபநிஷத்துக்களைப் படித்து 'ஞானம்' பெறவேண்டும் என்று உபதேசிப்பதாலும், ஆகமக் கருத்துக்களையும் சமஸ்கிருதத்தையும் கற்றுத்தர 'தனிப்பட்ட' பள்ளிகளையாவது நிறுவவேண்டும்-என்று, பேசுவதிலும் என்ன பொருள் இருக்க முடியும்?

சமத்துவத்தைப்பற்றி பேசும்போது 'தனிப்பட்ட' என்ற வார்த்தை தவறிவந்து விட்டதோ-என்னவோ!

பூவின் மறைவிலே இருந்தாலும் – பூநாகத்திற்கு விஷமில்லாமலா போய்விடும்!

சுழல் விளக்கு...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

சிரிப்பும் சீற்றமும், சேர்ந்து எழுகின்றது இந்த 'கோரத்தை' நினைக்கும்போது!

இந்த 'பாபாத்மாக்களை' பகலிலே உலவ விட்டால்—குடந்தை தெருக்களிலே — குருதி வெள்ளம் புரண்டோடும் என்ற காரணத்தால்—அந்த 'இருண்ட மதியினரை' இருளோடு இருளாக 'தனி ரயிலில்' கொண்டுவரப் போகிறார்களாம்; மிருகக் காட்சிசாலைக்கல்ல—மகாமகத் திருவிழாவிற்கு! ஆம்! குடந்தைக்கு!

சுயமரியாதையை சோரம் விட்ட பக்த கோடிகளே! பிறந்த கோலத்தோடு வரம் கேட்டால்தான் ஆண்டவன் அருள் பாலிப்பாரா? இந்த 'நிர்வாணப் பூஜை' ஐயனுக்கு ஏற்புடைத்தா? அம்மை கேட்டதா?

அல்லது

பெண் ஒருத்தியை நிர்வாணப் பிச்சை கேட்டானே பரமன்! அதற்குப் பழி வாங்கப் புறப்பட்ட, 'ஆண் வேட' அனுசூயாக்களா இவர்கள்?

இரவோடு இரவாக இதற்கும் பதில் கூறி விடுங்கள்!

★

மதுரை மாவட்ட செயற்குழுக் கூட்டம்

மதுரை மாவட்ட செயற்குழுக்கூட்டம் 12-2-56 காலை 10 மணிக்கு மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன்.

பொருள்: 20-2-56 ல் நடக்க இருக்கும் போராட்டம்.

எஸ். முத்து
மாவட்ட செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. க.

'தெய்வம்' காத்தது!

"......தன் அன்பு மகன்—அருமைக்கு அருமையானவன்—தனக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டியவன்—சாகக் கிடக்கிறான் என்றால் எந்த மன்னனால்தான் தாங்க முடியும் அந்த வேதனையை! **பாபர்** மட்டும் அதற்கு விதிவிலக்கா? படுக்கையிலே புலம்பியபடிக் கிடக்கும் ஆசை மகன் ஹுமாயூனைக் கண்டதும் மிகமிக வருந்தினார். தன் மகன் பிழைக்க வழி என்ன என்று யோசித்தார். முடிவொன்றும் செய்தார். உடனே ஆண்டவனை நினைத்தார். தன் மகனின் படுக்கையை மூன்று முறை வலம் வந்தார். "ஆண்டவனே! என் உயிருக்குயிரான மகனின் உயிரைக் கொடு—அதற்குப் பதிலாக இதோ, என் உயிரை வாங்கிக் கொள்!" என்று பிரார்த்தித்தார்; அழுதார். நாளடைவில் ஹுமாயூன் பிழைத்தார்; பாபர் செத்தார்; பிரார்த்தனை பலனைத் தந்துவிட்டது......"

படிப்பதை நிறுத்தினான் **சந்திரன்**. அதற்குமேல் அவனால் புத்தகத்தைப் பார்க்க முடியவில்லை. கலங்கி நின்ற கண்களைத் திருப்பினான். பக்கத்திலே தொட்டில்—அதிலே மூடிய கண்களுடன் அவனது அன்புத் தங்கை. சந்திரன் வெறிக்கப் பார்த்தான். மூடிய கண்கள் அப்படியே மூடியே போய் விட்டால்... அவன் 'குபுக்'கென்று நாற்காலியை விட்டு எழுந்தான். தொட்டிலிடம் ஓடினான். தங்கையின் மூக்கோரத்தில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சு வந்தது. அப்பப்பா! ஆனால் எத்தனை சூடான மூச்சு! சந்திரன் தங்கையின் உடம்பிலே கைவைத்துப் பார்த்தான். உடல் கொதித்தது; அவன் உள்ளத்தில் எங்கிருந்தோ வந்து குதித்தது பாழும் பயம்.

அன்று மாலை வந்திருந்த டாக்டர் தங்கையின் உடலைப் பரிசோதித்தார். ஆனால்...ஆனால்...அவர் முகம் ஏனோ கருத்தது.

"என்ன டாக்டர் சார்...?" என்று பதட்டத்துடன் கேட்டார்கள் அப்பாவும் அம்மாவும். டாக்டர் உதட்டைப் பிதுக்கினார். "நான் என்ன செய்வது? ஒரு மாதமாக உயிரைக் கொடுக்கத்தான் பார்த்தேன். ஆனால் இந்த உயிர் நில்லாதுபோலிருக்கிறதே...நான் என்ன செய்ய?... நீங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" என்று சொன்னார். போய் விட்டார். அம்மாவின் கண்களில் கண்ணீர் கசிந்தது. 'தொப்' பென்று கீழே உட்கார்ந்துவிட்டாள். அப்பாவோ சிலைபோல் நின்றார். ஆனால் சந்திரனோ..இந்த உயிர் நில்லாது போலிருக்கிறதே! அப்படியானால் தங்கை இறந்து விடுமா? ஐயையோ! அப்புறம் என்ன செய்வது?—இப்படியெல்லாம் யோசித்தான். தடுமாறினான். பாவம், சிறு கை நீட்டி சிரிப்பூட்டும் தங்கத் தங்கை போய் விட்டால் அவன் என்னதான் செய்வான்?

அந்தத் தங்கைக்காக அவன் எவ்வளவு பாடுபட்டிருக்கிறான்! தள்ளு வண்டியிலே தங்கை அமர்ந்திருக்க, பக்கத்து வீட்டு பாலன் சிரிப்பு தவழும் முகத்துடன் அதைத் தள்ளிச் செல்லுவான். சந்திரன் அதைப் பார்ப்பான்; ஏங்குவான். "அம்மா பசிக்குதே!" என்று தன் மழலை வாயால் பாடிக் கொண்டு பிச்சைக்கு வரும் ஏழைச் சிறுவனின் பக்கத்திலேயும் ஒரு தங்கை! அதையும் பார்ப்பான்; பரிதவிப்பான். தனக்கும் ஒரு தங்கை இல்லையே என்று அம்மாவிடம் ஓடுவான்; "அம்மா; அம்மா! எல்லா பசங்களுக்கும் தங்கச்சி இருக்கே, எனக்கு மட்டும் ஏம்மா இல்லே? எனக்கும் வேண்டுமம்மா!..." என்று அழுவான். அம்மா என்ன செய்வாள்? சிரிப்பாள்; அழும் மகனுக்கு ஆறுதல் சொல்வாள்.

இப்படி தங்கைக்காகத்தடுமாறிய சந்திரனுக்குத்தான் கடைசியில் **தங்கம்** கிடைத்தாள். சந்திரனின் சிரிப்புக்கு — பூரிப்புக்கு அளவேயில்லை.

"தங்கம்; தங்கம்" என்று வாய் நிறைய அழைத்துக் களித்தான். பிஞ்சுக் கால்களை உதைத்து உதைத்து தங்கை அழும். அவன் வியப்பான். "அம்மா; அம்மா! பார்த்தியா, உன் மகள் 'டான்ஸ்' ஆடுது!..." என்று சொல்லுவான். சிரிப்பான். அம்மாவால் சும்மா இருக்கமுடியுமா? அவளும் சிரிப்பாள்; தன் மகனின் சுட்டித் தனத்தை எண்ணி மகிழ்வாள்.

தங்கம் வளர்ந்தாள். அந்த இரு அரும்பு உள்ளங்களிலே பதிந்து கிடக்கும் பாசம் எத்தனை வலுவுடையது என்றுபார்க்கிறதுபாழும்நோய்?

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...

இதோ, அம்மாவும் அப்பாவும் சிலையாகமாற,அன்புஅண்ணன் சந்திரன் அழுது மாய—தங்கத்தின் உயிரைப் பறித்துச் செல்ல காத்து நிற்கிறது!

சந்திரன் மௌனமாக நின்றான். பக்கத்திலே கண்விழித்தபடி செய்வதறியாது உட்கார்ந்திருந்தார்கள் அம்மாவும் அப்பாவும். சந்திரன் மெதுவாக அம்மாவிடம் சென்றான். "அம்மா!...அம்மா! தங்கம்...தங்கம்..." என்று இழுத்தான். இல்லை; அழுதான்!

"தங்கம் தவிக்கவிட்டு விட்டுப் போகப் போறுடா!" என்று கத்தினாள் அம்மா. சந்திரனை அணைத்துக் கொண்டாள்.

சந்திரன் அம்மாவின் பிடியிலிருந்து விலகினான். ஏதோ யோசித்தான். அவன் மனக்கண் முன்னே சரித்திரப் புத்தகத்திலே படித்த அந்த வரிகள்—மகனின் உயிருக்காக ஆண்டவனிடம் தன் உயிரைத் தந்த பாபர்—இவை வந்து நின்றன. உடனே வேக வேகமாக நடந்தான். வீட்டின் ஒரு மூலையில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஏதோ ஒரு கடவுள் படத்தருகில் சென்றான்; நின்றான். "கடவுளே! என் தங்கை தங்கம் செத்துப் போயிடுமாம்! நீதான் காப்பாத்தனும். இந்தா—அதோட உயிருக்குப் பதிலா இதோ என் உயிரை எடுத்துக்கோ!" என்றான். சுற்றிச் சுற்றி வந்தான். பாவம், ஆண்டவன் என்ன அனுகுண்டா வைத்திருக்கிறார், 'சடா' ரென்று வீசி உயிரைப் பறிக்க?

சந்திரன் எதிர்பார்த்தான் தான் செத்து விடுவோம்; தங்கை 'சடக்' கென்று தொட்டிலை விட்டு எழுந்து விடுவாள்; ஓடி ஆடுவாள் என்று! ஆனால்...அவன் சாகவில்லை; தங்கையோ சாவதற்குத் தயாராகக் கிடந்தாள்.

சந்திரன் துடித்தான். என்ன செய்வது? பாபரின் பிரார்த்தனை—அவர் மரணம்—ஹுமாயூன் பிழைப்பு—இவை மீண்டும் அவன் கண்முன் வந்து நின்றன. "இதோ, நான் பிரார்த்தித்து விட்டேன்—நான் செத்து விட்டால் தங்கையை தெய்வம் காத்து விடும்!" என்று முணு முணுத்தான். மெதுவாக வீட்டை விட்டு வெளியே வந்தான். கவலைதோய்ந்த கண்களோடு, கண்மணி தங்கம் கண் திறக்காதா என்று பார்த்த வண்ணம் அமர்ந்திருந்த அப்பாவும் அம்மாவும் அவனைப் பார்க்கவில்லை. அவன் தெருவில் இறங்கினான். நல்ல இரவு—ஒரே அமைதி. எங்கிருந்தோ தெரு நாய்கள் பயங்கரமாக ஊளையிட்டன. சுவர்க் கோழிகள் நில்லாமல் கத்தின.

பூனைக்குட்டியைக் கண்டாலே பயந்து ஓடும் சந்திரன் இப்போது மட்டும் அஞ்சாமல் நடந்து கொண்டிருந்தான் இலட்சிய வீரனைப்போல.

ஆமாம்; உண்மைதான்! அவனும் ஒரு இலட்சியவாதி தானே! அவனுக்கும் கொள்கை இருக்கிறதே! தங்கை பிழைக்க வேண்டும்; தங்கை பிழைக்க வேண்டும்—இது அவனது குறிக்கோள்! அதிலே வெற்றிகாண அவன் தன் உயிரையே கொடுக்க ஓடிக் கொண்டிருக்கிறான்.

சில நாட்களுக்கு முன் நடைபெற்ற ஒரு பயங்கரச் சம்பவம் இன்னும் ஊரைவிட்டு மறையவில்லை. ஊர் பிரமுகர் ஒருவர்; பெருந் தனக்காரர். அவருடைய மகன் ஒருவன்—அவனுக்கு தண்ணீர் என்றால் ஒரே விருப்பம். அதன் காரணமாக ஊர் 'திருக் குள' த்திலே அவன் இறங்கியபோது—வழுக்கி விழுந்து இறந்துவிட்டான்.

அந்தச் சம்பவம் சந்திரன் நினைவுக்கு வந்தது. அவன் கால்கள் அதே திருக்குளத்தை நோக்கி வேகமாக நடந்தன.

குளத்தை அடைந்தான். குளத்தின் நான்கு கரைகளிலும் வரிசையாக மண்டபங்கள் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் ஒரு மண்டபத்தில் விறுவிறு என்று ஏறினான் சந்திரன். மண்டபத்தின் உச்சிக்கு சென்றான். நின்றான். அவன் கண்கள் குளத்தின் மத்தியிலே யிருந்த கோவிலைப் பார்த்தன. அந்தக் கண்களில் ஏதோ ஒரு நம்பிக்கை! அவன் கைகளைக் கூப்பினான். "தெய்வமே! என் உயிரை எடுத்துக்கிட்டு என் தங்கத்தின் உயிரைக் கொடு!" என்று முணுமுணுத்தான். கண்களை மூடினான். கூப்பிய கரங்களுடன்—

ஐயையோ, எப்படி, எந்தத் துணிவுடன் அதைச் சொல்வது? தங்கையின் உயிருக்காக தண்ணீருக்குள் குதித்துவிட்டான், 'தொபீர்' என்று.

★

விழுந்தவன் இறந்திருந்தால் இந்தக் கதையே இத்துடன் நிறைந்திருக்கலாம். ஆனால் சந்திரன் செத்துவிடவில்லை. மீண்டும் அவன் கண் விழிக்கத்தான் செய்தான், "தங்கம், பிழைச்சுட்டியா?" என்று கேட்டுக் கொண்டே.

ஆனால் எதிரே தங்கம் இல்லை—குளத்திற்குள் ஏதோ விழுந்த சப்தம் கேட்டு ஓடி வந்து அவனைக் காப்பாற்றி விட்ட எதிர் வீட்டுக்காரர்தான் இருந்தார். சந்திரன் வேகமாக எழுந்தான். "தம்பி! யாரப்பா நீ?" என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே அந்த மனிதர் அவனைப் பிடித்து இழுத்தார். ஆனால் அவர் கையிலே சிக்கி விடாமல் சந்திரன் வீட்டை நோக்கி ஓடினான். நனைந்த உடல்—நடுங்கிய உள்ளம்—தடுமாறும் நடை—இந்த நிலையில் ஓடினான். இடையிலே பலமுறை தள்ளாடி விழுந்தான். பாவம். அவனுடைய கால்கள் நடக்க மறுத்தன. எனினும் ஓடினான்; வீட்டை அடைந்தான்.

வாசலில் அடியெடுத்து வைத்தபோதே உள்ளே சிரிப்பொலி—ஆம் அதுவும் தங்கை தங்கத்தின் சிரிப்பொலி கேட்டது. அவன் திடுக்கிட்டான். 'தெய்வம் காப்பாற்றி விட்டது' என்று அலறிக் கொண்டு உள்ளே ஓடினான். தொட்டிலில் தங்கை உட்கார்ந்து கைகளை ஆட்டி சிரித்துக் கொண்டிருந்தது. சந்திரன் தங்கையைத் தொட்டான். அவன் கைகள் நடுங்கின. தங்கையின் உடலில் சூடே இல்லை; 'ஜில்'லென்று இருந்தது. அவனுக்கு ஒரே மகிழ்ச்சி! "தங்கை பிழைத்து விட்டது! தெய்வம் காத்து விட்டது!" என்றான்.

ஆனால் அவனுக்கென்ன தெரியும், அவனது தங்கத்தங்கைக்கு 'ஜன்னி' பிறந்து விட்டது என்பது! அவன் 'ஓகோ' என வாய் விட்டுச் சிரித்தான்.

மறுகணம் கீழே சாய்ந்தான்; தண்ணீரிலே மூழ்கிய தடுமாறிய உடல்—இதுவரை தங்கத்துக்காக ஓடிவந்த உடல்—சாய்ந்ததோடில்லை; "தெய்வம் காத்துவிட்டது தங்கையை!...இனி பதிலுக்கு நான் சாகிறேன், பிரார்த்தனைப்படி..." என்று முணுமுணுத்தபடி அவனது தலையும் சாய்ந்துவிட்டது.

"ஐயோ!" என்று அலறியபடியே பாய்ந்து வந்தார் அப்பா—சந்திரனின் உடலை வாரி எடுத்தார்!

அடுத்தவினாடி தொட்டிலுக் கருகிலிருந்து அம்மாவின் அலறலும் எழுந்தது—அவளது நடுங்கிய கரங்களிலே துவண்டு போன தங்கத்தின் உடல் இருந்தது!

ஒரே நாளில் இரண்டு செல்வங்களைப் பறிகொடுத்த அந்த வீட்டிலிருந்து எழும்பிய கதறல் ஊரையே கலக்கிவிட்டது. ஆனால் சந்திரன் பிரார்த்தித்த தெய்வத்தின் படம் மட்டும் ஏதும் அறியாததுபோல் தொங்கிக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில், சந்திரனைக் காப்பாற்றிய மனிதரோ, தன் வீட்டில் தன் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தார். "என் கண்ணே! இன்று உன்னைப் போன்ற ஒரு குழந்தையை சாவிலிருந்து தெய்வம் காத்தது! தெரிஞ்சிக்கோ! இனிமே தவறுமெ தெய்வத்தை வேண்டனும்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

—**சொர்ணம்**

கடைசிப்பக்கம்

எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :

(●) எஸ். பி. வீராசாமி, திருநெல்வேலி.

எஸ். நாகராசன், சென்னை-4,

(?) பிதற்றல் யாருக்கு ஏற்படுகிறது ?

தேவிகுளம் - பீர்மேடு பகுதிகளை இழந்து விட்ட பக்தவத்சலம் போன்ற கோழை எண்ணம் கொண்ட பிரபுக்களுக்கும், கொள்கையை விற்று விடும் கோணங்கி புத்திக்காரர்களுக்கும் !

டி. எம். கிருஷ்ணன், திருச்செந்தூர்.

(?) எழுத்தாணி! உம்மைப் பற்றி ஒருவர் நரகல் நடையில் எழுதினால் என்ன பதில் எழுதுவீர்?

"சகதியிலே கல் எறியாதே தம்பி!" என்று என் அண்ணன் எனக்குச் சொல்லித் தந்த பாடத்தை நினைவு படுத்திக் கொள்வேன்.

சே. கா. அருணாசலம், செட்டிப் பாளையம்.

(?) தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி எல்லைப்போராட்டத்தில் ஈடுபடச் செய்த பெருமை யாரைச்சேரும்?

பண்டித நேரு அவர்களைத்தான் அந்தப் பெருமை சாரும்.

துரை. முருகேசன், காரமடை,

(?) கும்பகோணத்தில் ஒரு கும்பமேளா நடைபெறப் போகிறதாமே ?

ஆமாம் - அதற்காகத்தான் மிகவும் சக்தி வாய்ந்ததாக மின்சார விளக்குகளைப் போடப் போகிறார்களாம். பாதி ராத்திரியில் பவனி வரப்போகும் நிர்வாணச் சாமிகளை பக்தைகள் தரிசிக்க வேண்டாமா? அதற்காக!

செங்குட்டுவன், சென்னை, 12.

(?) குடந்தை மகாமகத்தில் நிர்வாணச்சாமிகளை அனுமதிக்கும் அரசாங்கத்தை என்ன வென்று கூறுவது ?

பெரியார் பாஷையில் பச்சைத் தமிழ் ஆட்சி என்று கூறலாம். நமது கருத்தப்படி லச்சை கெட்ட ஆட்சி என்று அழைக்கலாம்.

இரத்தினவேலன், ரெட்டியூர், சோலையார்பேட்டை.

(?) எதையாவது எப்பொழுதாவது 'சூன்ய மண்டலம்" என்று அழைக்கலாமா ?

பிரதமர் பதவி கிடைத்த காலத்திற்குப் பிறகு நேருவின் இருதயம் அப்படித்தான் மாறி விட்டது தோழரே !

குப்புசாமி, அந்தணர்பேட்டை

(?) தேவிகுளம், பீர்மேடு பிரச்சனை முக்கியமா? தட்சிணப் பிரதேசம் வேண்டாமென்ற பிரச்சனை முக்கியமா ?

கண்ணிலே வெள்ளை விழி முக்கியமா? கருப்பு விழி முக்கியமா என்று கேட்பது போலிருக்கிறது இது ! இரண்டு பிரச்சனையும் முக்கியம் எனக் கருதித்தான் சர்வ கட்சித் தலைவர்கள் போர்க் கொடியை உயர்த்தி யிருக்கின்றனர்.

க. பழனிச்சாமி, இராசபாளையம்.

(?) அவனியிலே அழகாக ஆடை அணிவதில் விஜயலட்சுமி அம்மையாரும் ஒருவர் என்பது எதைக் குறிக்கிறது?

அந்த அம்மையார் ஆடைகளும் அணிகிறார்கள் என்பதைக் குறிக்கிறது!

ஊ. கு பழனிசாமி, ஊத்தபட்டி.

(?) எழுத்தாணியாரே! நீர் இந்நாட்டுப் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டால் ?

பயப்படாதீர்! அப்போழுதும் உமது கேள்விகளுக்குப் பதில் சொல்லுவேன்.

கா. செ. நடேசன், மண்ணச்ச நல்லூர்.

(?) தமிழர்களுக்குத் துரோகம் செய்த நேருவை இங்குள்ள காங்கிரஸ் தியாகிகள் கண்டிக்காதது ஏன் ?

அவர்கள் தமது உணர்ச்சியையும் தியாகம் செய்து விட்டார்கள்; அதனால்தான் !

(●) எஸ். பி. வீராசாமி, திருநெல்வேலி.

(?) காமராசரைப் பெரிய ராஜதந்திரி என்கிறீர்களே ; எப்படி?

அடிப்பதுபோல் அடியுங்கள் ; அழுவதுபோல் அழுகிறேன் என்று நடிப்பதில் அவர் சமர்த்தர்! கூட்டுச் சக்திகளைப் பிரிப்பதிலே நிபுணர்! டெலிபோன் பேச்சிலேயே மயங்கி விழுகிற ஆசாமிகள் இருக்கும்போது காமராஜர்கள் ராஜ தந்திரியாக வாழ்வது பெரிய காரியமா என்ன?

★ நடிகர் குரல் ★

நடிப்புப் புலவர்

கே. ஆர். ராமசாமி

திருவாங்கூர்-கொச்சி, ஆந்திர மாநிலங்களில் பிணைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளைத்தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்றும், தட்சிணப் பிரதேச அமைப்பு என்ற பேரால், தென்னாட்டு மக்களின் உரிமையைப் பறிக்க திட்டமிடும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியினையும் எதிர்த்து தமிழகத்தின் செல்வாக்கு பெற்றுள்ள கட்சிகளும், அக்கட்சிகளின் தலைவர்களும் வெளியிட்டுள்ள வேண்டுகோளுக்கு இணங்க 20-2-56 அன்று தமிழகமெங்கும் நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தில், சினிமா-நாடகத் துறையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நடிகர், நடிகைகளும், ஸ்டுடியோ உரிமையாளர்களும், தொழிலாளர்களும் பெரும்பங்கு கொண்டு கடமையாற்றுமாறு ஆவன செய்ய நடிகர் சங்கம் முன்வர வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழர்-ஆந்திரர்—கன்னடியர், கேரளத்தவர் ஆகிய நான்கு பகுதி மக்களும் மொழிவழி அடிப்படையில் தனித்தனி ஆட்சி புரிந்தும் இனவழி அடிப்படையில் ஒன்றுபட்டும் இயங்கும் உயர் கொள்கையை உருவாக்கும் வகையில்-தோழமை உள்ளத்துடன், ஆந்திர-மலையாள-கன்னட நடிகர்களும், 20-2-56 பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டு நடிகர் சங்கத்தின் கடமை உணர்ச்சியை நிலை நாட்ட வேண்டுமென்று ஆசைப் படுகிறேன்.

அன்பன்,

கே. ஆர். ராமசாமி

சிவாஜி கணேசன்

தேவிகுளம் பீர்மேடு முதலிய பிரதேசங்களும், ஆந்திராவில் சில தமிழ்ப் பிரதேசங்களும் தமிழ் நாட்டிலிருந்து பறிக்கப்பட்டு விட்டதைக்கண்டு சகல கட்சித் தலைவர்களும் கிளர்ச்சி செய்யத் தீர்மானித்து ஒன்றுபட்டு திட்டம் ஏற்பாடு செய்து, வருகிற பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி பொது வேலை நிறுத்தம் செய்யுமாறு மக்களையும், தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது அறிஞர் அண்ணாவும், தமிழரசுக் கழகத்தலைவர் ம. பொ. சி. யும், கம்யூனிஸ்டுதலைவர் ஜீவானந்தம் அவர்களும், மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒற்றுமைப் பட்டு போராட்டம் வகுத்ததற்கு நாடே மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறதெனலாம். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவுதரும் அளவில், 20-ந்தேதி வேலை நிறுத்தத்தின் போது நடிகர்கள் யாரும் 'ஷூட்டிங்'குகளில் வேலைசெய்வதோ— நாடகங்களில் நடிப்பதோ இல்லாமல் அனைவரும் கேரள, ஆந்திர நடிகர்கள் உட்பட ஹர்த்தால் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காவன செய்யுமாறு தென்னிந்திய நடிகர் சங்கத்தாரையும் என் தனிப்பட்ட முறையில் வேண்டிக் கொள்ளுகிறேன். யாருக்கும் நஷ்டமில்லாத அளவில் மொழி வாரியாக பிரிந்து இனவாரியாக ஒற்றுமைப்பட்டு, அந்த ஒற்றுமையைக் காப்பாற்ற தமிழ், ஆந்திர, கன்னடிய, கேரள நடிகர் அனைவரும் ஒருமனப்பட்டு ஒத்துழைக்க வேண்டிய காரியமாகும், இது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

சிவாஜி கணேசன்

★ தென்னகத்து முக்கலையின் வைரத் தொட்டில்!

●

எழுச்சிக்கு வித்திடும் — 'பவனி'

துடுக்கு மிக்கோரின் இடுப்பொடிக்கும் சவுக்கடி — 'திரும்பிப்பார்!'

வரப்போகும் புதுப் படங்களுக்கு — 'பராக்!'

திரையுலகத்து புதிய செய்திகள் — 'தெரியுமா?'

கலைத்துறை ஏடுகளுள் புது முயற்சி — 'கால்ஷீட்!'

இன்னும் எத்தனையோ—அத்தனையும் உண்டு!

பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

'வெள்ளி வீதி'

இரண்டாவது இதழ் விற்பனையாகிறது!

அடுத்த இதழில் : டைரக்டர், கிருஷ்ணன் பஞ்சு எழுதும்,

'பட உலகில் டைரக்டர்'

தொடர் கட்டுரை துவங்குகிறது!

'வெள்ளி வீதி' 28-3 கிராம்ஸ் ரோட், நுங்கம்பாக்கம், சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6